www.padippakam.com

# கலைப்பாதையில்

## கிறெகரி தங்கராசா



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கலைப்பாதையில் இவர் ..

(நடிப்பிசைக் காவலர் கிறெகரி தங்கராசாவின்
25ஆண்டு கால கலை வாழ்வு பற்றிய பார்வை)

*திருத்திய இரண்டாவது பதிப்பு*

**- வண்ணை தெய்வம் -**

நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
51, Rue de la Parabole
95800 Cergy, France.
Tél. 01 30 32 57 25

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

அமரர்

நாட்டுக்கூத்துக்

கலாநிதி

பூந்தான் ஜோசேப்

அவர்களுக்கு

# சமர்ப்பணம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# அணிந்துரை

கலைத்தாயின் மடியில் கால் நூற்றாண்டினை தாண்டி (02.08.1993) தனது பிறந்த நாள் விழாவையும், கலை வாழ்வின் வெள்ளி விழாவையும் கொண்டாடிக் கொண்டிருக்கும் *கலைச்சுடர், நடிப்பிசைக்காவலன்* திரு. கிறெகரி தங்கராஜாவின் கலைவாழ்க்கையை நூல் வடிவமாக்கிய திரு வண்ணைதெய்வத்திற்கு முதற்கண் என் வாழ்த்துக்கள்.

இறைவன் ஒரு கலைஞன். அக் கலைஞனின் கலைப்படைப்பில் உதித்தவைதான் நீா், நிலம், காற்று, மரம், செடி, கொடி, புல், பூண்டு, மிருகம், மனிதன். இவ் உன்னத கலைப்படைப்புக்களில் முதன்மை வாய்ந்ததுதான் மனிதப் படைப்பு. இந்த மனிதனை இறைவன் தனது சாயலாகவே படைத்ததன் நோக்கம், அவனும் தன்னைப் போலவே ஒரு கலைஞனாகவே வாழவேண்டும் என்ற நோக்கோடுதான். அப்படிப் படைக்கப்பட்ட மனிதா்களுள் ஒரு சிலரே அந்தப் படைப்பின் நோக்கறிந்து இறைவனின் தொண்டாகிய கலைத்தொண்டினைச் செவ்வனே செய்து வருகின்றார்கள். அந்தக் கலைச் சேவையினைச் செய்து வரும் கலைஞர்களுள் தன் முழு உழைப்பினையும் முற்று முழுதாக கலைக்கு அர்ப்பணித்த மாபெரும் கலைஞர்தான் கலைச்சுடர் திரு. கிறெகரி தங்கராஜா அவர்கள். இவ் அரும்பெரும் கலைஞன் தனது 25 வருட கால கலைவாழ்வில் சாதித்த பெரும் சாதனைகள் பற்றிப் பல அறிஞர்கள், எழுத்தாளர்கள் பேசியும் எழுதியும் கவிகள் மூலம் பாடியும் கௌரவித்துள்ளனர். ஆனால் அம்மாபெரும் கலைஞனின் கலை வாழ்க்கையை நூல் வடிவமாக்கிய திரு.வண்ணை தெய்வம் அவர்கள் அளப்பரிய சேவையைக் கலைத்தாய்க்குச் செய்துள்ளார். ஒரு கலைஞன் மேடையில் நடித்தாலும் சரி, பாடினாலும் சரி, அல்லது நடனம் ஆடினாலும் சரி அவனுடைய ஆன்மா திருப்திப்படுவது அதைக்கண்டு களித்த மக்களின் பாராட்டுக்கள் மூலமே. ஆனால் அப்பாராட்டுக்கள் புகழுதல்கள் எல்லாம் படிப்படியாக குறைந்துவிடும். ஆக அக்கலைஞன் ஆற்றிய கலைத்தொண்டுகள் நூல் வடிவில் வந்தால்தான்

படிப்பகம்

www.padippakam.com

அவை அழியாப்புகழ் எய்துகிறது. வாழையடி வாழையாக வளர்ந்துவரும் தமிழ்ச்சமுதாயம் நம் முன்னோர்கள் சாதித்த கலைச்சேவைகளை நம் இளம் சமுதாயம் படித்துப் பெருமைப்படுவார்கள். அந்த வகையில் திரு. வண்ணை தெய்வம் அவர்கள் கலைஞன் கிறெகரி தங்கராஜாவின் கலை வாழ்வைப்பற்றிய இந்நூலை எழுதியதில், அவர் கலைத்தாய்க்கு மாபெரும் தொண்டினைச் செய்தவர் ஆகிறார்.

கிறெகரி தங்கராஜாவைப்பற்றி அதிகம் எழுதத்தேவையில்லை. அவருடைய கலைச்சேவைபற்றி இந்நூலில் திரு.வண்ணை தெய்வம் மிக அழகாக எடுத்துரைத்துள்ளார்.மிகக் குறுகிய காலத்தில் அதாவது மூன்று நாட்களுக்குள் இந்நுலைத்தொகுத்து புத்தக வடிவமாக்கியுள்ளார்.
ஆக கலைஞன் திரு.கிறெகரி தங்கராசாவைப்பற்றித் திரு. வண்ணை தெய்வம் அவர்கள் அத்தனை தூரம் ஆர்வத்துடன் அறிந்து வைத்துள்ளார் என்பது தெளிவாகத்தெரிகிறது.

தமிழனின் பாரம்பரியக் கலைகளாகிய இயல், இசை, நாடகம், நாட்டுக்கூத்து போன்றவற்றினை இன்று அகில உலகமும் பார்த்தும் கேட்டும் அறியும் வண்ணம் செய்து வருகிறார்கள் தமிழ்க் கலைஞர்கள். இப்படியான பெரும் சாதனைகளைச் செய்து வரும் பெரும் கலைஞர்களுள் திரு.கிறெகரி தங்கராஜா முன்னணியில் நிற்கின்றார். அவர் ஐரோப்பிய மண்ணில் ஆற்றிய கலைச் சேவை உலகமெங்கும் பரந்து வாழும் தமிழர்கள் அனைவருமே அறிவார்கள்.

இப்படியான கலைத்தொண்டினைச் செய்துவரும் திரு.கிறெகரி தங்கராஜாவின் கலைவாழ்வினை நூல் வடிவமாக்கிய திரு. வண்ணைதெய்வம் அவர்கள் மேலும் பல கலைஞர்களின் கலைவாழ்வினை நூல் வடிவமாக்கி தமிழ் மக்களுக்கு கொடுக்க எல்லாம் வல்ல இறைவன் நல்லாசிகளையும் நற்சுகத்தினையும் கொடுக்கவேண்டுமென்று வேண்டுகின்றேன்.

வாழ்க வண்ணை தெய்வம்
வாழ்க கலைச்சுடர் திரு. கிறெகரி தங்கராஜா.

அன்புடன்
**திரு. பெஞ்சமின் இம்மானுவல்.**

படிப்பகம்

www.padippakam.com

# மதிப்புரை

கலாநிதி அருட்தந்தை நீ. மரியசேவியர் அடிகள்
Rev. Fr. N.M. Saveri
L. Th. (ROMA), Vidvan-Pulavar (Madurai)
Ph. D. (London) D. Th(Passau)

## தமிழ் நெஞ்சங்களே..!

உங்கள் அனைவர்க்கும் எனது உள்ளம் நிறைந்த வணக்கங்கள். நடிப்பிசைக்காவலன் கிறெகரி தங்கராசா அவர்கள் தனது கலைவாழ்வின் இருபத்திஐந்தாவது நிறைவுவிழாவை கொண்டாடும் இந்தவேளையில் திருமறைக்கலாமன்றமும் இவ்விழாவின் நிறைவில் திளைத்து அவரை பாராட்டுவதில் பெருமிதம் கொள்கிறது. வளர்ந்து வந்த பெரும் கலைஞர்களுள் கிறெகரி தங்கராசாவும் ஒருவர்.

எமது மன்றம், சமய, சமூக, இலக்கிய நாடகங்களை யாழ்.நகரிலும் இந்திய நாட்டிலும் மேடையேற்றியிருக்கிறது. அந்த நாடகங்களிலெல்லாம் வெவ்வேறு பாத்திரங்களை பொறுப்பேற்று அந்த பாத்திரங்களின் சுவை குன்றாமல், ரசிகர்கள் மத்தியில் பாராட்டுகளை பெறக்கூடிய அளவிற்கு நடித்து தன்னுடைய கலைத்திறமையை காட்டியவர் கிறெகரி தங்கராசா அவர்கள்.

தமது கஷ்டங்களை பாராமல், தமக்கு என்ன நேரும் என்று எண்ணாமல் நாம் அவருடைய உதவியைக்கோரியபோதெல்லாம் முன்னுக்கு வந்து நமக்கு கரம்கொடுத்து கலைப்பணியாற்றுவதில் முதன்மையாளராய் திகழ்ந்தது அவரிடம் உள்ள இன்னொரு சிறப்பு.

கலையுடன் மட்டும் நின்ற விடாது மற்றவர்கட்கும் ஒரு மன்றத்தின் மூலமாக பணிசெய்யவேண்டும் என்கின்ற அந்த அடிப்படைப்பண்பு அவருடைய மனதில் அன்றும் வேரூன்றி இருந்தது. இன்றும் அதுதான் அவருக்கு முழுமூச்சாக இருக்கின்றது என்று நான் எண்ணுகிறேன். அதையிட்டு பெருமிதம் அடைகின்றேன்.

கிறெகரி தங்கராசா அவர்களைப் புரிந்து கொள்வதற்கு கலை உள்ளம் வேண்டும். அதாவது குழந்தை உள்ளம்வேண்டும்.

ஒரு கலைஞனிடம் நிறைவும் உண்டு குறைகளும் உண்டு. ஆனால் அவைகளை நாம் புரிந்து கொள்வதற்கு அந்த குழந்தை உள்ளம் நம்மிடமும் வேண்டும். குழந்தை உள்ளத்துடன் பார்க்கின்றபொழுதுதான் அந்தக் கலைஞனுடைய சிறப்பை நாம்

படிப்பகம்

www.padippakam.com

புரிந்துகொள்ளமுடியும். அது மாத்திரமல்ல அப்படி பார்க்கும்போது அந்தக் கலைஞனுடைய நிறைவுகளெல்லாம் நமக்கு சிறப்பான கண்ணாடியில் தென்படும். அப்பொழுதுதான் நிறைவாக அவரை நாம் புரிந்து கொள்ளலாம்.

இந்தக் கலைஞன் யாழ். மண்ணில் பிறந்து இன்று அந்த மண்ணிற்கு பாரிஸ் நகரத்தில் புகழ்தேடி தந்துகொண்டிருக்கின்றார்.
அவருடைய கலைவாழ்வு மீண்டும் மீண்டும் மேலும் மேலும் வளர்ந்து விண்ணினை நோக்கி இந்தக் கலைவாழ்வால் இன்பத்தை அளிக்கவேண்டும்.
கலை உணர்வை ஊட்டவேண்டும்.
வருங்கால கலைவாழ்விற்கும் சரி, அந்தக் கலைவாழ்வை ஒட்டிய ஆன்மீகத்துறைக்கும் சரி கிறெகரி தங்கராசா அவர்கள் தம்முடைய பணியினை செய்து நிறைவேற்றவேண்டுமென்று விரும்பி இவர் புகழ் பாரெங்கும் பெருகிவளர்ந்து உயர்ந்து சிறந்து மலர்ந்து இறைஅருளையும் பரப்பிடவேண்டுமென்று ஆசிகூறி வாழ்த்துகிறேன்.

அன்பர்களே!
விழா நாயகனே!
உங்கள் அனைவர்க்கும் எனது உள்ளம் நிறைந்த வாழ்த்துக்கள்.

வாழ்க தமிழ்!
வளர்க தமிழ் கலைஞர்கள்!!

என்றும் அன்புடன்
**நீ. மரியசேவியர்**
●

(ஒலிப்பதிவு நாடாவில் பதியுசெய்யப்பட்ட சிறப்புச்செவ்வியில் இருந்து எடுக்கப்பட்டது)

படிப்பகம்

www.padippakam.com

# வண்ண வரிகள்

**என் மதிப்பிற்குரிய வாசகர்களே!**

இது என் நண்பனின் கதை. ஒரு கலைஞனின் கதை. ஒரு மனிதனின் கதை. இந்தப்புத்தகத்தில் வரும் பக்கங்கள் எல்லாம் கலாநயத்தோடு உலாவரும் உண்மைக் கலைஞனின் கதை.
பலாப்பழத்தை வெட்டி உண்ட பின்பும் அதனை தொட்ட விரல்களில் பழத்தின் வாசனை விட்டு விலகாமல் ஒட்டி இருப்பது போல, இந்தப்புத்தகத்தில் சேர்க்காமல் விட்டு விடப்பட்ட பகுதிகளிலும் இந்தக் கலைஞனின் சுவையான பகுதிகள் பல இருக்கின்றன.
அவைகளை ஏன் சேர்க்கவில்லை என்று நீங்கள் கேட்பதும் என் காதுகளில் கேட்கிறது. சுவையான இந்தப்புத்தகத்திற்குள் இருக்கும் செய்திகளுக்கு அவை குறுக்கே வந்து நின்று இடையூறு செய்யக்கூடாது என்பதற்காக.

மூன்று தலைமுறைகளுக்கு ஒரு முறைதான் திறமையான கலைஞன் உருவாகிறான் என்று பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அது எந்த அளவிற்கு உண்மையோ எனக்குத் தெரியாது. ஆனால் மூன்று தலைமுறைகளைக் கண்டுவிட்ட ஒரு கலைஞனின் கதையை எழுதியதில் எனக்கு மகிழ்ச்சி. என் மனதில் திருப்தி.
இப்பொழுது எங்களோடு வாழ்ந்து கொண்டு இருப்பவர்களில் பலர் பார்த்தே இருக்காத பூந்தான் யோசேப், நடிகமணி வி.வி.வைரமுத்து, லண்டன் கந்தையா புகழ் சானா, நாட்டுக்கூத்தில் புகழ்பெற்ற நாவாந்துறை பெலித்தியான், மரியதாஸ், சின்னக்கிளி, பாசையூர் குணசிங்கம் போன்ற மூத்த தலைமுறை கலைஞர்களுடன் இந்தக் கலைஞர் நடித்திருக்கின்றார். இலங்கை வானொலி நடிகனும் பொறுத்தது போதும் நாடகத்திற்காக ஜனாதிபதி பரிசு பெற்றவருமான பிரான்சிஸ் ஜெனம், பிரபல நகைச்சுவை நடிகர் டிங்கிரி சிவகுரு, பிரபல வானொலி நடிகை சுப்புலட்சுமி காசிநாதன், ஆண்டவர் என்று அழைக்கப்படும் இம்மானுவல் போன்ற எமக்குத்தெரிந்த

படிப்பகம்

www.padippakam.com

அடுத்த தலைமுறை கலைஞர்களுடனும் நடித்திருக்கின்றார்.

இன்று எம்மிடையே வளர்ந்துவரும் இளம் கலைஞர்களுடனும் நடித்துக்கொண்டிருக்கிறார்.
இப்படி மூன்று தலைமுறைகளைக் கொண்ட இந்தக் கலைஞன் ஐம்பது வருடங்களை தாண்டி நிற்கும் இந்தப் பொன்விழாவிலே இருபத்தி ஐந்து வருடங்களைக்கடந்து கலைச்சேவைபுரியும் இந்த வெள்ளி விழாவிலே கிறெகரியின் கதையை புத்தகமாக தருவதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களை நடித்து முடித்து பாடல் நடிப்பு என்று ஐயாயிரத்திற்கு மேற்பட்ட மேடைகளில் இலங்கையின் பல பாகங்களிலும் தோன்றியதோடு மட்டுமல்ல, அருட்தந்தை நீ. மரியசேவியர், பூந்தான் யோசேப் போன்ற பெருங்கலைஞர்கள் இலங்கை வானொலியில் போட்ட நாடகங்களிலும் நடித்திருக்கின்றார். அத்தோடு நிற்கவில்லை. இந்த வெள்ளிவிழா நாயகனின் கலைவாழ்வு பல்லாயிரம் மைல்களைக் கடந்து ஐரோப்பாவிலும் பலமேடைகளில் ஒலித்திருக்கிறது.

இப்படியான ஒரு சிறந்த கலைனின் வாழ்க்கையில் மறைந்து கிடந்த நிகழ்வுகளை நூலாக உருவாக்கும் பணி எனக்கு கிடைத்ததில் நான் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். சில சமயங்களில் கிறெகரியைப் பார்த்து நான் வியந்த நாட்கள் பல உண்டு.

கிறெகரியால் நடிக்கமுடியாத பாத்திரமென்ன? படிக்கமுடியாத பாடல்தான் என்ன?
சமய சமூக சரித்திர இசை நாடகங்களில் எல்லாம் நடித்திருக்கின்றார். இன்னிசை மெல்லிசை துள்ளிசை கூத்துப்பாடல்கள் என்று அனைத்தையும் பாடியிருக்கின்றார். இவைகளைப்பார்த்து வியக்காமலிருக்கமுடியுமா? என்னுடைய வியப்பிற்கு இவை மட்டுமல்ல காரணம்.

வளர்ந்து வரும் இளம் கலைஞர்களை தூக்கி விடுவதில் இவருக்கு இருக்கும் ஆர்வம் . . .
அவை கிறெகரியை அறிந்தவர்களுக்கு மட்டும் தெரிந்த விடயம். கிறெகரியின் இயக்கத்தில் வெளியான சங்கமம் என்ற வீடியோ பத்திரிகையிலே பலருக்குத்தெரியாமல் இலை மறை காயாக இருந்த இளம் கலைஞர்களை எமக்குப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். சந்தர்ப்பம் கிடைக்காமல் ஒதுங்கியிருந்த பல கலைஞர்களை அரங்குக்கு கொண்டுவந்து அவர்களின் திறமைகளை வெளிச்சத்தில் உலாவவிட்டிருக்கிறார்.
இவைகளை எல்லாம் பார்த்து நான் வியந்த நாட்கள் பல உண்டு.

படிப்பகம்

www.padippakam.com

பழம் காலத்தில் கலைஞர்களை அரசர்கள் அழைத்து பொற்கிளிகள் வழங்கி கௌரவித்ததாக கதைகளில் படித்திருக்கிறேன். இன்று கரகோசங்களை தருவதற்குக்கூட கஞ்சத்தனம் காட்டும் கனவான்களைத்தான் காண முடிகிறது. ஆனாலும் அழுக்குத் தடாகத்தில் தாமரை மலர்வது போல கலைஞர்களை வாழ்த்தவேண்டும், பாராட்டவேண்டும், கௌரவிக்கவேண்டும் என்ற ஆங்காங்கே சிலர் தோன்றுவதையும் நான் பார்க்கிறேன். அந்த வரிசையில் ரஜனி பதிப்பகத்தினரையும் பார்க்கிறேன்.

குறுகிய கால இடைவெளி இருந்தபோதும் கிறெகரியை கௌரவிப்பதில் நாங்கள் முன்னிலை வகிக்கவேண்டும் எனக் கூறி கிறெகரியின் கலை வாழ்க்கையை கதையாக்கும் பாரிய பொறுப்பை என்னிடம் தந்தார்.
காலம் சிறிது. ஆனால் கடமையோபெரிது. எனக்கிருந்த ஏனைய வேலைகட்கு ஓய்வு கொடுத்துவிட்டு மூன்றுநாட்கள் தொடர்ந்து ஒரேஇடத்தில் அமர்ந்து ரஜனி பதிப்பகம் தந்த பொறுப்பை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறேன்.

அவசரமாக இதை எழுதியதால் சிலமுக்கியமான நிகழ்வுகள் விடுபட்டிருக்குமோ என்ற சந்தேகமும் எனக்கு உண்டு. அப்படி ஏதேனும் விடுபட்டிருந்தால் அந்ததவறிற்கு பொறுப்பாளி நான் மட்டுமே. ஆனால் இப்புத்தகத்தின் நிறைவிற்காக மூன்று இரவுகள் என்னோடு தங்கியிருந்து பல தகவல்களை முழுமையாகத் தந்துதவிய எனது நண்பனும் கிறெகரியின் இருபத்தைந்து வருட கலை வாழ்வில் இணைபிரியாதிருக்கும் ஆருயிர் நண்பனுமான பெஞ்சமின் இம்மானுவேல் தான் முழுக்காரணம்.
பக்கம் பக்கமாகக் கவனமாகப்படித்து தவறுகளைத்திருத்தி ஆண்டுகளின் தகவல்களை சரியான முறையில் தந்து இப்புத்தகத்தின் சிறப்புக்காக உழைத்த இம்மானுவேலின் சேவை பெருமைக்குரியது.

இந்த புத்தகத்தில் உள்ள பக்கங்கள் சிலருக்குக் கசப்பாக இருக்கலாம் அது என்னுடைய குற்றமல்ல, அவர்களுக்கு உண்மை கசக்குமேயானால் அது அவர்களின் குற்றம். இந்தப் புத்தகம் ஒரு திறமைசாலிக்குச் செய்யப்படும் ஒரு சிறிய சிறப்பு.
அந்தச் சிறப்பை செய்து முடித்த ரஜனி பதிப்பகத்திற்கும், அந்தச் சிறப்பிற்குரியவராக விளங்கும் கிறெகரி தங்கராசாவிற்கும் என் வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கின்றேன்.

பொன் விழாக் காணும் நாயகனே, உனது மணிவிழாவிற்கும்
வாழ்த்துக்கூற எனக்கு ஆசை!
அன்புடன். . . . . .
**வண்ணை தெய்வம்**

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# வாழையடி வாழை

துட்டரை அடக்கவல்ல சூர வேடுவரே கேளும்.
மட்டடங்காத மான் மரை வேட்டையாடி,
கட்டடங்காத கங்கு கரை சுரங்கமதி,
வட்ட மாய் உள்ள நாடெல்லாம் வாருங்கள் பார்க்கலாமே!

இந்த பாடலை இரவு அவர் பாடத்தொடங்கியதும் அயலில் உள்ளவர்கள் எல்லோரும் ரசித்துக் கேட்டபார்கள். ஆனால் அந்தச் சிறுவனுக்கு மட்டும் அந்தப் பாடலும் அதற்குரிய ராகமும் பிடிக்கவே பிடிக்காது.

"இது என்ன கூத்துப்பாட்டு, எத்தனையோ நல்ல சினிமாப்பாட்டுக்கள் எல்லாம் இருக்கின்றனவே! அதில் ஒன்றைப் பாடாமல் இவர் இந்த கூத்துப் பாடலைப் பாடுகின்றாரே" என்று அந்தச் சிறுவன் மனதுக்குள்ளேயே பொருமிக்கொள்வான்.

அந்தப் பாடலைப் பாடுபவர் செல்லர் டேவிற் அவர்கள் பாடலைப் பொறுக்காது பொருமிக் கொண்டிருக்கும் சிறுவன் வேறு யாருமல்ல அவருடைய மகன் "கிறெகரி தங்கராசா" தான்.

இவருடைய தந்தை டேவிற் ஒரு சிறந்த நடிகர், பல நாட்டுக்கூத்துகளில் நடித்திருக்கிறார். ஏராளமான நாட்டுக்கூத்துகளுக்கு பிற்பாட்டு பாடியிருக்கிறார். அந்த பாடல்களின் அடிகளையெல்லாம் மாலைப்பொழுதில் பாடி மகிழ்வதில் அவருக்கு பேரின்பம். டேவிட்டின் தந்தை செல்லர் பெயர் சொன்னால் தெரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு புகழ்பெற்ற அண்ணாவியார் மட்டுமல்ல சிறந்த சிற்பக் கலைஞரும் கூட. அடைக்கலமாதா கோயிலை நவீனமாக புனரமைப்பதற்கு முன் சக்கரையால்தான் சுருவமும் அதற்குரிய அமைப்புகளும் செய்து வைத்திருந்தார்களாம். அதனை அமைத்த அந்த சிற்பி இந்த செல்லர்தான்.

இப்படி வாழையடி வாழையாக வந்த கலைக்குடும்பத்தின் வழித்தோன்றல்தான் இந்தக் கிறெகரி தங்கராசா.



படிப்பகம்

www.padippakam.com

## சொந்தக் கதை சொல்லவா.

அழகுமிகு யாழ்ப்பாணத்தில் இன்றும் இளம் கலைஞர்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் மத்தியூஸ் வீதியில் டேவிட் அன்னம் தம்பதிகளுக்கு புதல்வனாக 02.08.1943 ஆம் ஆண்டு பூமியில் பிறப்பெடுத்தவன் கிறெகரி தங்கராசா.

இவன் குழந்தையாக இருந்தபோது கேட்ட தாலாட்டுப் பாடல்கள் கூட பழைய நாட்டுப்பாடல்களே. இவனின் தாயைவிட தந்தை டேவிட் அவர்களே இவனை அதிகமாகத் தாலாட்டுப் பாடி தூங்கவைப்பார். அவர் பாடுவது எல்லாம் நாட்டுக்கூத்துப் பாடல்கள்தான்.

கிறெகரிக்கு முதல் பிறந்த மகனுக்கு வைத்தியம் செய்வதற்காக நடக்கத்தெரியாத ஆறுமாத குழந்தையாக இருந்த இவனையும் தூக்கிக்கொண்டு டேவிட் தம்பதிகள் தமிழ் நாட்டுக்குச் சென்று வேலூர் வைத்தியசாலையில் ஆறுமாதம் தங்கியிருந்தார்கள். தவள்ந்து கொண்டிருந்த இந்தச் சிறுவன் பாதங்களைப் பதித்து நடக்கத்தொடங்கியது தமிழ்நாட்டு மண்ணில்தான்.

“இன்று கலைப்பாதையில் நான் வெற்றியாக நடப்பதற்கு கலைவளர்க்கும் நாடான தமிழ் நாட்டு மண்ணில் என் பாதங்கள் பட்டதுதான் காரணமோ?” என்று பெருமிதத்தோடு தன் நண்பர்களுடன் கலந்துரையாடிக்கொள்வார் கிறெகரி அவர்கள். பாடல்கள் கேட்பதில் சிறுவயதிலேயே அவனுக்கு அதிக விருப்பம். ஆனால் தந்தை பாடும் அந்த நாட்டுக்கூத்துப்பாடல்கள் பிடிக்காது! சினிமாப் பாடல்கள் என்றால் அவனுக்கு உயிர். வீட்டில் வானொலிப் பொட்டி இல்லை, ஆதலால் வீதிக்கு வந்து பக்கத்து வீட்டு வானொலியில் பாடும் பாடலை தன்னை மறந்து ரசித்துக் கேட்பான்.

கோவில் திருவிழாக்கள், நாடக நிகழ்சிகளுக்கு ஒலிபெருக்கி கட்டினால் மறுநாள் ஒலிபெருக்கி அந்த இடத்தைவிட்டு போகும் வரைக்கும் அவனுக்கு வீடு ஒன்றிருப்பதே தெரியாது. எப்படியாவது ஒலிபெருக்கிக்கு சொந்தக்காரரை சினேகிதம் பிடித்து அவருக்கு வேண்டிய சிறுசிறு உதவிகளை செய்து கொடுத்து தான் விரும்பும் பாடல்களை போடவைத்துக் கேட்பதில் பெரும் மகிழ்ச்சி அவனுக்கு. இப்படி வீட்டை மறந்து பாட்டுக் கேட்டுக் கொண்டதனால் தாயாரிடம் வாங்கிக் கட்டிக் கொண்ட நாட்கள் பலவுண்டு. ஆனாலும் மறுமுறை எங்காவது ஒலிபெருக்கி பாடும் சத்தம் கேட்டால் அடுத்த நிமிடமே கிறெகிரியை அங்கே காணலாம். பள்ளிக்கூட பாடப்புத்தகங்களை விட



படிப்பகம்

இவனிடம் இருக்கும் சினிமாப் பாட்டுப் புத்தகங்களுக்கு எண்ணிக்கையே கிடையாது.

அவள் பறந்து போனாளே...
எனை மறந்து போனாளே...

இந்த அடியை சிறினிவாசனின் குரலில் பாடிவிட்டு அடுத்த நொடியில் சௌந்தர்ராஜனின் குரலில் உச்சத்தொனியில்

அவள் எனக்கா மகளானால்
நான் அவளுக்கு மகளானேன்

என்று பாடி தன் திறமையைப் பற்றி அவனே மகிழ்ந்து கொண்ட காலம் அது. அந்த சிறுவயதில் அவனுக்கு ஒரு ஆசை. இல்லை, அது அவனது இலட்சியமாக இருந்தது. சிறினிவாசனைப் போல, சௌந்தர்ராஜனைப்போல நான் ஒரு பாடகனாக வரவேண்டுமென்று. இந்த சினிமாப் பாடல் மோகத்தால் தான் அந்த சிறுவயதில் தந்தை பாடும் நாட்டுக்கூத்துப் பாடல்கள் அவனுக்கு பிடிக்காமல் இருந்தது.

# இளமையில் புகழ்.

சுண்டுக்குளி சென். ஜோன்ஸ் கல்லூரியில் அந்த இளைஞன் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு இசையில் எவ்வளவு ஆர்வமோ! நாடகக் கலையில் எவ்வளவு ஆர்வமோ! அதே போன்று விளையாட்டுத்துறையிலும் அவனுக்கு கூடியஆர்வம் இருந்தது. உதைபந்தாட்ட விளையாட்டில் முன்னணியில் நின்ற பாடசாலைகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் ஒன்று. அந்தக் கல்லூரியின் உதைபந்தாட்டக் குழுவின் இரண்டாவது அணியிலும் முதலாவது அணியிலும் கிறெகிரி ஒரு விளையாட்டு வீரன். அந்த அணியின் வெற்றிகளில் கிறெகரியின் பங்கு முக்கியமாக இருந்தது. கிறெகரிக்கென்று ஒரு ரசிகர் கூட்டமே உருவாகி வந்தது. இசையில், நாடகக் கலையில் புகழ் பெறவேண்டும் என்று விரும்பிய அவனுக்கு விளையாட்டுத்துறைமூலம் தான் புகழ் பரவ ஆரம்பித்தது. கிறெகிரி



படிப்பகம்

www.padippakam.com

விளையாடுகிறான் என்றால் ஒரு பெரும் கூட்டமே திரண்டுவரும். அந்தக் கூட்டத்தில் முதல் வரிசையில் முதல் ஆளாக வந்திருப்பவர் இவரின் தந்தை டேவிட் தான்.

"என்னப்பா டேவிட் உன்ரை மோன் தங்கராசா இண்டைக்கு இரண்டுகோல் அடிச்சானப்பா...

ச்சு...நாவூறுபடக்கூடாது என்ன விளையாட்டப்பா..." இப்படியான வார்த்தைகளை மற்றவர்கள் கூறும்போது டேவிட்டர் நிலத்தில் நிற்கமாட்டார் அந்தரத்தில் ஒரு பிரமை... அந்த சந்தோஷத்தால் இரண்டு போத்தல் கள்ளு வயிற்றுக்குள் போய்விடும். கள்ளு உள்ளுக்குப் போனதும் அவர் பாட ஆரம்பிப்பது நாட்டுக்கூத்துப் பாடல்கள்தான். ஆனால் கிறெகரிக்கு இப்பொழுது அந்தப் பாடல்களை கேட்பதில் ஆர்வம். மனதிற்குள் அந்தப் பாடல்களை தானும் ஒருமுறை பாடிப்பார்ப்பான்.

"இந்தப் பாடல்களை ஏன் நாகரீகமாக, கவர்ச்சியாக பாடிப்பார்க்கக்கூடாது." இப்படி சிந்திக்க ஆரம்பித்தான். சிந்தித்தவைகட்கு பிற்காலத்தில் செயல்வடிவம் கொடுத்தான்.

## கலைவாழ்வு ஆரம்பம்.

தந்தையின் நாலு முள வேட்டியை அவருக்குத் தெரியாமல் எடுத்து தாயார் சட்டைக்கு குத்தும் ஊசியை நாலு இடத்தில் குத்தி, வீட்டிற்கு பின்பகுதியில் உள்ள பூவரசு மரத்தில் ஒரு கம்பியைக் கட்டி, இந்த வேட்டியை ஒரு சீன்சாக உபயோகித்து மேடையில்லாமல், ஒலிபெருக்கியில்லாமல் ஐந்து சத டிக்கட்டுக்கு நாடகம் போட்ட காலம் விலகி, இப்பொழுது கிறெகரி தங்கராசாவை ஒரு பாடகனாக, ஒரு நடிகனாக மக்கள் அங்கிகரித்து விட்டார்கள்.

சுண்டுக்குளியில் உள்ள நாடக மன்றங்கள் "இந்த பாத்திரத்திற்கு கிறெகரிதான் பொருத்தமானவன்" என்று உணர்ந்து பாத்திரங்களை கொடுக்கும் அளவிற்கு கலைஞர்கள் மத்தியில் புகழ் பெற்றிருந்தார் கிறெகரி. பாடும் திறனும் கூடவே இருந்ததால் இசை நாடகங்களில் நடிக்கும் வாய்ப்புக்களும் கிறெகரியை தேடி வந்தது.

"மானம் பெரிது", "ஜோசப் வாஸ்" போன்றவை கிறெகரியின் ஆரம்ப நாடகங்கள். இந்த நாடகங்களில் நடித்ததால் கிறெகரிக்கு பெயரும்



படிப்பகம்

www.padippakam.com

புகழும் கிடைத்தாலும் மனதிற்கு ஒரு நிறைவு கிடைக்கவில்லை. தனது திறமையைக் காட்ட தனக்கு ஒரு சந்தர்ப்பம் இன்னமும் கிடைக்கவில்லை என்றே அவன் எண்ணினான். தனக்கு ஏற்ற பாத்திரம் தனக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று அவனுடைய மனம் கூறியது. இயக்குனர்கள் தன்னை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்கள் தான் நடிக்கும் பாத்திரத்தை இன்னும் மெருகூட்டிச் செய்யலாம் ஆனால் இயக்குனரின் சிந்தனை வேறு மாதிரி இருக்கின்றதே என்று கவலைப்பட்டான். ஆம்! தானே ஒரு நாடகத்தைத் தயாரித்து இயக்குவது என்பதுதான் அதன் முடிவு. அந்த முடிவின் பிரதிபலிப்புத்தான் ஆனந்தக்கண்ணீர் நாடகம். ரசிகர்களை மட்டுமல்ல சக நாடக கலைஞர்களையும் வியக்கவைத்தது. கல்நெஞ்சம் படைத்தவர்களை கூட கண்ணீர் விடவைத்துவிடும் கிறெகரியின் அற்புதமான நடிப்பு. அந்த நாட்களிலேயே பதினைந்து தடவைகளுக்கு மேல் மேடையேறிய சமூகநாடகம் அது.

இதனைத் தொடர்ந்து "இறைவன் இருக்கின்றானா?", "ஊதாரிப்பிள்ளை", "மானம் காத்த மறவன்", "செஞ்சோற்றுக் கடன்" போன்ற பதினைந்துக்கும் மேற்பட்ட சமூக, சரித்திர நாடகங்களை தானே தயாரித்து, நெறியாள்கை செய்து நடித்து மக்கள் மத்தியில் சிறந்த கலைஞன் என்ற பெயரை எடுத்து வந்தவன் கிறெகரி. அதுமாத்திரமல்ல "மனம் திருந்திய சவுல்", "வழக்கறிஞன்", "அபாய அறிவிப்பு" போன்ற நாடகங்களும் கிறெகரிக்கு பெரும் புகழைத் தேடித்தந்தன.

திருகோணமலை நிலாவெளி நாடகமன்றத்தில் நடித்த "சமூகத்துரோகி", குருநகர் மன்றத்தில் நடித்த "உயர்ந்த உள்ளம்" போன்ற நாடகங்களால் யாழ்ப்பாணத்தை விட்டு பரந்து வாழ்கின்ற தமிழர்கள் மத்தியில் எல்லாம் கிறெகரியின் பெயர் பரவ ஆரம்பித்தது. நாடக நடிகன் என்ற ரீதியில் மட்டுமல்ல பாடகனாக, அறிவிப்பாளனாக, நிகழ்ச்சி அமைப்பாளனாக இப்படி பல்துறைவித்தகனாக விளங்கிய கிறெகரிக்கு மனதிலே தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு கலைஞன் யாழ்ப்பாணத்திலேயே இருந்தார். அனேகமானவர்களிடம் உங்களுக்கு யாருடைய நடிப்பு பிடிக்கும் என்று கேட்டால் "சிவாஜியின் நடிப்புப் பிடிக்கும், கமலின் நடிப்பு பிடிக்கும், ரஜனியின் நடிப்புப் பிடிக்கும், மம்முட்டியின் நடிப்பு பிடிக்கும்" இப்படி யாராவது ஒரு தென்னிந்திய சினிமா நடிகர்களின் பெயரைத்தான் கூறுவார்கள்.

ஆனால் கிறெகரி தங்கராசாவிடம் உங்களுக்கு பிடித்த நடிகர் யார் என்று கேட்டால் நடிகமணி வி.வி.வைரமுத்து என்று பளிச்சென்று சொல்லுவார்.



படிப்பகம்

வைரமுத்துவின் நடிப்பில் தன்னை மறந்தவர். வைரமுத்து என்ற கலைஞரிடம் தன்னை பறிகொடுத்தவர். வைரமுத்துவின் "அரிச்சந்திரா மயான காண்டம்" நாடகத்தில் காதல் கொண்டவர். வைரமுத்துவைப் போல் தானும் நடிக்கவேண்டும் என்ற ஒரு இலட்சியத்தை ஒரு வைராக்கியத்தை தன்னை அறியாமலே தன் மனதில் வளர்த்து வந்தார்.

இலட்சியத்தை நிறைவேற்றினாரா? ஆசையை நிறைவேற்றிக் கொண்டாரா? பின்னால் வரும் பக்கங்களில் தெரிந்து கொள்வோம்.

## கலையா? பாசமா?

1968 ஆம் ஆண்டு நாவாந்துறையில் உள்ள ஒரு திருக்கோவில் திருப்பணிக்காக கிறெகரி தங்கராசாவின் "ஆனந்தக் கண்ணீர்" நாடகம் நிதியுதவிக் காட்சியாக ஏற்பாடாகியிருந்தது.

ஒரு பொறுப்பை ஏற்றுவிட்டால் எவ்வளவு சிரமம் ஏற்பட்டாலும் அதை முழுமையாகச் செய்து முடிப்பதில் கிறெகரி தங்கராசா முழுமூச்சுடன் செயற்படுவான். அன்றும் அப்படித்தான், அரங்க அமைப்புக்கள் செய்வதில் இருந்து விளம்பர வேலைகள் வரை கிறெகரியின் கண்காணிப்பில்தான். அறிவிப்புத் துறையிலும் கிறெகரிக்கு ஆர்வம் இருந்ததால் அன்று காலையே ஒலிபெருக்கி கட்டிய வாகனத்தில் ஒலிவாங்கியை கையில் எடுத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான். மதியம் சாப்பாடுகூட இல்லை. நாவாந்துறை, ஆனைக்கோட்டை, கொட்டடி, ஐந்து முச்சந்தி இப்படி முக்கியமான பகுதிகளில் எல்லாம் ஒலிபெருக்கியில் விளம்பரம் செய்துவிட்டு சாப்பிடுவதற்கும் தனது அயலில் விளம்பரம் செய்வதற்குமாக யாழ்ப்பாணத்தில் உள்ள தனது வீட்டை நோக்கிக் காரைச் செலுத்துமாறு கூறுகிறான். யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியைக் கடந்து அடைக்கலமாதா ஆலயத்துக்கு அருகாமையில் இரண்டாம் குறுக்குத் தெருவுக்குள் வாகனம் திரும்புகின்றது. சற்றுத் தொலைவில் கிறெகரியின் ஒரு உறவினர் வீட்டுக்கு முன்னால் சிறிது சனக்கூட்டம். கலைஞனுக்கே உரிய சிந்தனை "இந்த இடத்தில் ஒருக்கா ஒலிபரப்புச் செய்வோம்" இப்படி எண்ணினான் கிறெகரி. இருந்தாலும் அக்கூட்டத்தில் உள்ளவர்களின் முகங்களில் மாறுதலான கவலைக்கோடுகள். இதையும் அவன் கவனிக்கத் தவறவில்லை. ஒருவேளை ஏதாவது விபத்தாக இருக்குமோ? இல்லை யாருக்காவது சுகயீனமாக இருக்குமோ? இப்படி விபரீதமான சிந்தனைகள் அவனுடைய

www.padippakam.com



பாரிஸில் கலைக்கோயில் மேடையேற்றிய **பாதுகை** நாடகத்தில்...
சீதையாக நடித்த கலைஞர். டி. கிறெகரி அவர்களின் புதல்வியும் காணப்படுகிறார்

பாரிஸ்-கலைக்கோயில் தயாரித்து வெளியிட்டுவரும் பல்கலைவீடியோமலர் **சங்கமம்**
ஆரம்பவிழாவில் ஏனையகலைஞர்களுடன்...
திரைநீக்கம் செய்துவைத்த மூத்த எழுத்தாளர் எஸ். அகஸ்தியர்
மற்றும் சங்கீதபூசணம் எம். ஏ. குலசீலநாதன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

மனதில். வீட்டின் முன்னால் இவர்களுடைய வாகனம் நிற்கின்றது. கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே சென்ற அவனுக்கு பெரும் அதிர்ச்சி. மல்லாகத்தில் வசிக்கும் கிறெகரியின் பெரியப்பா பெனடிக்ற் அவர்கள் வந்த இடத்தில் மாரடைப்பால் இறந்துவிட்டார். பசிக்கு சாப்பிட வந்தவனுக்கு பசியைவிட துக்கம் தொண்டையை அடைத்துவிட்டது. பெரியப்பா இறந்த துக்கத்தைவிட நாடகம் போட முடியாதே என்ற கவலை அதைவிட அதிகம். நாடக அமைப்பாளர்கள் நாடகத்தை நிறுத்தி வேறொரு நாள் வைப்போம் என்று கூறுகின்றார்கள். என்ன முடிவு எடுப்பது என்று குழம்பிய நிலையில் கிறெகரி. தந்தை டேவிட் கூறுகின்றார், "தங்கராசா நாடகத்தை நிப்பாட்டுறதாலை செத்தவர் உயிர்த்துவரப் போவதில்லை. நீ நாடகத்தை முடிச்சுக் கொடுத்திட்டு இரவு பன்னிரெண்டு மணிக்குள்ள மல்லாகத்துக்கு வா"

தந்தையின் வார்த்தைகளைக் கேட்டு கிறெகரியின் உடம்பு புல்லரிக்கின்றது. கலைக்கு தன் தந்தை கொடுத்த மதிப்பைக் கண்டு அவன் கண்களில் கண்ணீர்...

பெரியப்பாவின் மரணத்திற்காகத்தான் அழுகின்றான் என்று மற்றவர்கள் எண்ணிக் கொண்டார்கள் . அன்றைய நாடகத்திலும் உணர்ச்சி பொங்க கதறி அழுது நடித்தான் கிறெகரி. பெரியப்பாவிற்காகவும் அல்லவா அவன் அழுது கொண்டிருக்கின்றான். அன்று விழுந்த கரகோஷங்கள் ஒன்றும் அவன் காதில் கேட்கவில்லை.

அழுதான்...நடித்தான்... அழுதழுது நடித்தான். அந்த நாள் அவனால் மறக்கமுடியாத நாள்.

ஆதே போல இன்னொரு நாழும் உண்டு. அது கிறெகரியின் நண்பனும் சிறந்த நகைச்சுவை நடிகருமான டிங்கிரி இறந்தநாள்.

## நகைச்சுவை நடிகன் டிங்கிரியோடு:

"டிங்கிரி சிவகுரு" இவரை அறியாதவர்களே இருக்கமுடியாது. சாதாரணமாக டிங்கிரியுடன் கதைத்தால் கூட சிரிப்பார்கள். டிங்கிரி மேடையில் தோன்றினால் கேட்கவும் வேண்டுமா?

கிறெகரியின் தணியாத ஆசைகளில் ஒன்றான "அரிச்சந்திர மயான காண்டம்" நாடகத்தை அரங்கேற்ற முயன்றபோது "அயலாத்து பிள்ளையாக" யாரை நடிக்க வைக்கலாம் என்று எண்ண டிங்கிரி தான்



படிப்பகம்

அதற்கு பொருத்தமான நடிகர் என்று கிறெகரி முடிவு கட்டிவிட்டார். டிங்கிரியும் மறுக்கவில்லை.
இருபத்தி மூன்று மேடைகளுக்குமேல் யாழ்பாணம் எங்கும் "மயான காண்டம்" நாடகம் மேடை ஏறியது.
டிங்கிரியின் நடிப்பும் அரிச்சந்திரா நாடகத்தின் வெற்றிக்கு கிறெகரிக்கு உறுதுணையாக இருந்தது.
அன்று தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள அரசினர் வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள ஒரு ஆலயத்தில் இன்னிசைச் கச்சேரிக்காக தான் பாடிவரும் ரமணியம்மாள் இசைக்குழுவினருடன் ஆலயத்துக்கு செல்கின்றான் கிறெகரி. அப்போது டிங்கிரி சிவகுரு ஆகியோரின் நகைச்சுவை கதம்ப நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கின்றது. அந்த நிகழ்ச்சி முடிந்தபின் தான் இவர்களுடைய இன்னிசை நிகழ்ச்சி ஆரம்பமாகும். இன்னிசைக் குழுவினர் சிறிது ஓய்வு எடுக்கின்றார்கள். கிறெகரி அங்கு சந்தித்த தனது நண்பர்களுடன் உரையாடிக்கொண்டு நிற்கின்றான். அந்த நேரத்தில் விழா அமைப்பாளர்களில் ஒருவர் வேகமாக வந்து கிறெகரியிடம் கூறுகின்றார்,
"தம்பி டிங்கிரிக்கு திடீரென்று சுகமில்லாமல் வந்திட்டுது நீங்கள் உங்கடை நிகழ்சியைத் தொடங்குங்கோ."
"என்ன டிங்கிரிக்கு சுகமில்லையா?" கிறெகரியின் உதட்டில் இருந்து ஆச்சரியமான வார்த்தைகள், முகத்தில் கவலைக்கோடுகள், டிங்கிரியைப் பார்ப்பதற்காக ஓடினான் முடியவில்லை. காரணம் டிங்கிரியை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள்.
"வைத்தியசாலைக்கு சென்று பார்ப்போமா?" அப்படி சிந்திக்க முடிந்ததே தவிர கிறெகரியால் டிங்கிரியைச் சென்று பார்க்கமுடியவில்லை. ஏனென்றால் அடுத்தது இவர்களுடைய இன்னிசைக் கச்சேரி. கிறெகரிதான் முக்கிய பாடகன் எப்படிப்போகமுடியும்?
ஒரு உற்சாகம் இல்லாமல் மேடையில் அமர்ந்து பாடுகின்றான் கிறெகரி.
முதலில் பக்திப் பாடல்... தொடர்ந்து இரண்டொரு மெல்லிசைப்பாடல்கள். வழமையாக கிறெகரி பாடும் போது ரசிகர்களிடமிருந்து வரும் கரகோஷம் இன்று இல்லை. அதன் காரணம் கிறெகரிக்கே புரிந்தது. தான் பாடுவது தனக்கே திருப்தியில்லாமல் இருப்பதை கிறெகரி புரிந்து கொண்டார். கிறெகரியின் முழு சிந்தனையும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நண்பன் டிங்கிரியைப் பற்றியே இருந்தது. அடுத்த பாடலைப் பாடுவதற்கு கிறெகரி தயாராகி விட்டார். அப்பொழுது

www.padippakam.com

ஒருவர் சிறுதுண்டில் ஏதோ எழுதிக் கொடுகின்றார். இது சாதாரணமாக எல்லா மேடைகளிலும் நடப்பதுதான். ரசிகர்கள் தாங்கள் விரும்பிய ஏதாவது ஒரு பாடலைப் படிக்கும்படி கேட்பார்கள். இன்று அவர்கள் கேட்கும் பாடல்களைப் படிக்கும் மனோநிலையில் கிறெகரி இல்லை. விருப்பு இல்லாமல் அந்தச் சீட்டைப் படிக்கின்றார். ஒன்றுக்கு மூன்றுமுறை படிக்கின்றார். கிறெகரியால் அந்தச் செய்தியை நம்ப முடியவில்லை.

“டிங்கிரி வைத்தியசாலையில் காலமாகி விட்டார். இச்செய்தியை அறிவிக்கவும்.” இதுவே அந்தச் சீட்டில் எழுதியிருந்த வசனம்.

“பேரன்பு மிக்க ரசிகப்பெருமக்களே சற்று நேரத்திற்கு முன்பு உங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திக் கொண்டிருந்த என் அருமை நண்பன் டிங்கிரி வைத்தியசாலையில் காலமாகிவிட்டார்.” இந்த அறிவிப்பைக் கிறெகரியே அறிவித்துவிட்டு கனத்த இதயத்தோடு மேடையை விட்டு இறங்கிப்போகின்றார் கிறெகரி. இன்னிசை நிகழ்ச்சியை மட்டுமல்ல ஆலயவிழா நிகழ்ச்சியையும் அத்துடன் முடித்துக்கொண்டார்கள். தன்னுடைய நண்பனின் மரணச் செய்தியை தனது வாயாலே சொல்லிய வேதனை கிறெகரியின் மனதைக் கசக்கிக் கொண்டே இருந்தது. கலைக்காக தன்னுடைய வாழ்க்கையை தியாகம் செய்த அந்தக் கலைஞன் நடித்துக் கொண்டிருக்கும்போது மேடையில் மயங்கி வீழ்ந்து இறந்துவிட்டான்.

அவன் கலைஞன்... ஆம் அவன் கலைஞன்... டிங்கிரி என்ற அந்த கலைஞனை கிறெகரியால் மறக்கமுடியவில்லை. அந்த நாளையும் தான் கிறெகரியால் மறக்கமுடியவில்லை.

## திருமறைக்கலாமன்றத்தில் கிறெகரி:

கிறெகரி தங்கராசா தயாரித்த “மனம் திருந்திய சவுல்” என்ற நாடகம் கிறெகரிக்கு பெரும் புகழைத் தேடிக் கொடுத்தது.

யாழ்ப்பாணத்தில் மேடையேறிய அந்த நாடகத்தை ஒருமுறை அருட்திரு மரியசேவியர் அவர்கள் பார்த்து கிறெகரியைப் பாராட்டுகின்றார். அதன் பின் மற்றவர்களிடம் கிறெகரியைப் பற்றி விசாரிக்கின்றார். உச்சதொனியில் பாடும் திறன், நடிக்கும் திறன் இருப்பது மட்டுமல்ல கலையை மதிக்கும் குணமும் கிறெகரியிடம் இருப்பதை அறிந்து திருமறைக்கலாமன்றத்தில் உறுப்பினராக்கிக் கொள்கின்றார். கிறெகரிக்கு திருமறைக்கலாமன்றம் ஒரு பல்கலைக்கழகமாகவே இருந்தது. ஒரு பாத்திரத்தை மேடையில் முகத்தாலும்



படிப்பகம்

www.padippakam.com

வசன உச்சரிப்பாலும் முழுமையாக சித்தரிப்பதே நடிப்புக் கலை. அந்தக் கலையில் உள்ள நுணுக்கங்களை கற்றுக்கொண்டது கிறெகரி திருமறைக் கலாமன்றத்தில் தான்.

ஆருட்திரு மரியசேவியர் அவர்கள் பழகுவதற்கு நல்ல நண்பனாக, நாடகங்களை இயக்கும் போது சிறந்த ஆசிரியனாக, அதனை மேடையேற்றும் போது கடும் உழைப்பாளியாக மாறும் விந்தையை கிறெகரி பலமுறை பார்த்து வியந்ததுண்டு. ஒருமுறை கிறெகரியைப் பற்றிக் கூறும் போது அவர் இப்படிக் கூறினார்.

"கலைஞனானவன் குழந்தையுள்ளம் கொண்டவன், அந்தக் கலைஞனின் நடிப்பை நாமும் குழந்தையுள்ளத்தோடு பார்த்து ரசிக்கவேண்டும். அப்பொழுதுதான் அந்தக் கலைஞனின் நடிப்பை முழுமையாக ரசிக்கமுடியும். இபடியான குழந்தையுள்ளம் கொண்ட மாபெரும் கலைஞன்தான் கிறெகரி தங்கராசா"

இப்படியான பாராட்டுக்களை அருட்திரு மரிய சேவியரின் வாயில் இருந்து எல்லோரும் பெற்றுவிட முடியாது. அந்த பெருமை கிறெகரிக்கு உண்டு.

திருமறைக்கலாமன்றம் தாயரித்த யேசுவின் திருப்பாடுகளின் காட்சியான "பலிக்களம்" நாடகம் இலங்கையெங்கும் இருபத்தைந்து தடவைகளுக்குமேல் மேடையேறியது. அந்த நாடகத்தில் பிலாத்துவாக நடித்தவர் கிறெகரி. இதில் இன்னொரு பெருமைக்குரிய விடயம் என்னவென்றால் கிரகரியின் இருபத்தைந்து வருட கலைவாழ்வில் இன்று வரை இணைபிரியாது தொடர்ந்து நடித்துவரும் பெஞ்சமின் இம்மானுவல் அவர்கள் பலிக்களம் நாடகத்தில் யேசுநாதராக நடித்ததுதான்.

1973ஆம் ஆண்டு இந்தியா சென்ற திருமறைக்கலாமன்ற கலைஞர் குழு திருச்சியில் உள்ள தேவர் அரங்கில் "களங்கம்" என்ற நாடகத்தை நவீன முறையில் மேடையேற்றினார்கள். அந்த நாடகத்தில் உள்ள சிறப்பு என்னவென்றால் நாடகத்தின் முக்கிய பாத்திரமான யேசுநாதரை எந்த ஒரு கட்டத்திலும் காட்டாமல் அந்த பாத்திரத்தை கற்பனையில் வைத்து நெறிப்படுத்தியிருந்தார் அருட்தந்தை. பல கலைஞர்களும் அறிஞர்களும் நாடகத்தை மெய்மறந்து பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். நாடகத்தின் உச்சக் கட்டத்தில் கிறெகரி தங்கராசாவின் நடிப்பும், அவருடன் இணைந்து நடித்துக் கொண்டிருந்தவர்களின் நடிப்பும், நாடகத்துக்கு சிறப்பு விருந்தினராக வந்திருந்த திருச்சி ஆயர் அவர்களை மெய்மறக்கச் செய்தது. தன்னை மறந்து மேடைக்கு வந்த அந்த ஆயர் கலைஞர்களைப் பாராட்டினார். அந்த பாராட்டுக்கு பின்பே மிகுதி நாடகம் நடந்தது. இந்த நிகழ்வு



படிப்பகம்

www.padippakam.com

திருமறைக்கலாமன்றத்துக்கும் அந்தநாடகத்தின் முக்கிய நடிகராகிய கிறெகரி தங்கராசாவுக்கும் பெருமைக்குரிய விடயமாகும்.

அருட்தந்தை மரியசேவியர் இயக்கி வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறிய "அளவு கோல்" நாடகமும் அதன் பின் மேடையேறிய "வா மகனே வா" நாடகமும் கிறெகரிக்கு பெரும் புகழை தேடிக்கொடுத்தது. இந்த நாடகம்தான் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட முதல் வீடியோப்படமாகும்.

அவரின் இயக்கத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த நான்காவது தமிழாராட்சி மகாநாட்டில் நடந்த "கலையும் காவியமும்" என்ற நாடகத்தில் நடித்து பாராட்டுப்பத்திரமும் பெற்றார் கிறெகரி. திருமறைக் கலாமன்றத்தில் நடித்தபோது மறக்கமுடியாத சம்பவம் ஒன்றைக் கூறுங்கள் என்று கிறெகரியிடம் கேட்டபோது கிறெகரி கூறியது "1971ஆம் ஆண்டு சித்திரை மாதம் நாலாம் திகதி யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் பலிக்களம் நாடகத்தைப் போட்டபோது தான். ஏனெனில் அன்று "சேகுவரா" என்று அழைக்கப்படும் புரட்சிவாத இளைஞர்கள் கோட்டைக்குள் சிறைவைக்கப்பட்டிருந்த தங்களது இயக்கத் தலைவர் றோகண விஜேவீரா அவர்களை மீட்பதற்காக அங்கு வந்திருந்தார்கள். அன்று நடந்த சம்பவம் என்றும் மறக்கமுடியாது."

## அந்த இரவு:

பகல் பன்னிரெண்டு மணி இருக்கும் அருட்தந்தை சவிரிமுத்து (சவரிமுத்து, மரியசேவியர் இருபெயர்களுக்கும் சொந்தக்காரர் ஒருவரே) அவர்களின் தலைமையில் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட பின்னணிக் கலைஞர்கள், அரங்க அமைப்பு செய்து கொண்டிருந்தார்கள். ஒலி அமைப்பாளர்கள், ஒளி அமைப்பாளர்கள், காட்சி அமைப்பாளர்கள் இப்படி பலதரப்பட்ட கலைஞர்களும் ஓடி ஓடி வேலைசெய்து கொண்டு இருக்கின்றார்கள். அவர்களுள் ஒருவனாக கிறெகரியும் நிற்கின்றான். கிறெகரிக்கு இரவு நடிப்பதுதான் வேலையிருந்தாலும் தான் தோன்றும் அந்தக் காட்சிக்கு மேடை சரியாக அமைகிறதா என்பதை நேரடியாக நின்று கவனிப்பதற்காகவே பகலே வந்துவிட்டார். கோட்டைக்கு மேலே பலகையால் மேடையாக்கப்பட்டு அதனை மூன்று பிரிவுகளாக பிரித்து மூன்று அரங்கங்களில் நடிகர்கள் இடைவெளி இன்றி நடிப்பதற்கான முறையில் மிகவும் பிரமாண்டமான முறையில் அரங்கம் அமைக்கப்பட்டு கொண்டு இருக்கின்றது. இதனை



படிப்பகம்

www.padippakam.com

இலங்கையில் இருந்து பிரபல மின் ஒளி அமைப்பாளர்கள் “பராக்கிரமா” அவர்கள் ஒளிஅமைப்பு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். அந்த நேரத்தில் புத்தபிக்குகள் போன்ற உடையணிந்துள்ள சில இளைஞர்கள் இவர்களை அணுகி அங்கு என்ன நடக்கப்போகின்றது என்பதைப் பற்றி விசாரிக்கின்றார்கள். “இங்கு நடக்கப் போவது யேசுவின் கதை பாஸ். இது முடிய இரவு பத்து மணிக்கு மேல் செல்லும்” அங்கு நின்றவர்களோடு சேர்ந்து கிறெகரியும் பதில் சொல்லுகின்றார். அவர்களுடைய முகத்தில் இலேசான கவலை அவர்கள் அந்த இடத்தைவிட்டுச் செல்கின்றார்கள். சில மணிநேரத்துக்கு பின்பு அதே போன்ற தோற்றமுடைய வேறு சில இளைஞர்கள் வந்து “உங்கள் நாடகத்தை சீக்கிரமாகவே முடிக்கமுடியாதா?” என்று வினாவுகின்றார்கள்.

“இது அப்படியெல்லாம் முடிக்கமுடியாது திட்டமிட்டபடி தான் எல்லாம் நடக்கும்” இது இவர்கள் தரப்பின் பதில். இவர்கள் தாங்கள் திட்டமிட்ட படி நடாத்துவார்கள் ஆனால் அவர்கள் திட்டமிட்டபடி நடாத்துவதற்கு இவர்கள் தடையாக இருக்கின்றார்கள் என்பது இவர்களுக்கு தெரியவில்லை. ஆம் புத்தபிக்கு வேசத்தில் வந்தவர்கள் சேகுவேரா இளைஞர்கள் அவர்கள் கோட்டையை உடைத்து கோட்டைக்குள் சிறைவைக்கப்பட்டிருக்கும் தங்கள் இயக்கத் தலைவர் றோகண விஜயவீர அவர்களை அன்றிரவு சிறை மீட்டுக் கொண்டு போக திட்டமிட்டிருக்கின்றார்கள். அதற்குத் தடையாக இவர்கள் கோட்டைக்கு மேல் மேடை அமைத்திருப்பதும், நாடகம் பார்க்க வரும் மக்கள் திரும்ப செல்லும்வரை அவர்கள் போராட்டத்தை தொடங்கமுடியாது இதற்கெல்லாம் இவர்கள் தான் காரணம் என்பது இவர்களுக்கு எப்படித் தெரியும்.

மாலை ஆறுமணி எள் விழுந்தால் எண்ணெயாக்கித்தரக்கூடிய அளவு கட்டுக்கடங்காத மக்கள் கூட்டம். இருபத்தையாயிரம் மக்களுக்கு மேல் இருக்கும் என்று மறுநாள் பத்திரிகைகள் கணித்திருந்தன. அருட்தந்தை சவரிமுத்து அவர்கள் திட்டமிட்டபடி நாடகத்தை ஆரம்பித்து இரவு ஒன்பது முப்பதற்குள் முடிவடைந்துவிட்டது. நாடகத்தில் பங்குபற்றிய இருநூறுக்கும் மேற்பட்ட கலைஞர்களை வணக்கத்துக்குரிய ஆயர்.எமிலியானஸ் பிள்ளை, ஆயர் தியோகுப்பிள்ளை அவர்கள் பாராட்டுகின்றனர். கிறெகரிக்கும் இம்மானுவேலுக்கும் விசேடமான வாழ்த்துக்களும் கிடைக்கின்றன. எல்லோருக்கும் மகிழ்ச்சி.

நேரம் பத்துமணியைத் தாண்டிவிட்டது. பார்வையாளர்கள் அனைவரும் சென்றுவிட்டார்கள். அருட்தந்தை சவரிமுத்து உட்பட சுமார்



படிப்பகம்

www.padippakam.com

எண்பது பேர் மட்டும் நிற்கின்றார்கள். சாப்பிடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. கிறெகரியும் சந்தோசத்துடன் நிற்கின்றார் அவர்களுடன். அந்த நேரத்தில் பயங்கரமான சத்தத்துடன் குண்டுவெடிக்கும் ஒலி கேட்கின்றது. தொடர்ந்து பல துப்பாக்கி வெடிச்சத்தங்கள். என்ன என்று பார்ப்பதற்கு துடிப்புடன் ஓடி வருகின்றார் கிறெகரி. அவரின் தலைக்கு மேலால் ஒரு குண்டு சீறிக்கொண்டு போகின்றது. அப்படியே தரையில் அமர்ந்து கொள்கின்றார். பொலிஸ் நிலையத்தில் அபாய மணி அடிக்கின்றது. பொலிஸ் குவாட்டர்ஸ் இல் இருந்து பெண்களும், குழந்தைகளும் கூக்குரல் இடும் சத்தம். அந்த இடமே போர்களம் போல் காட்சியளித்ததாகக் கூறுகின்றார் கிறெகரி. அப்பொழுது யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரிண்டனாக கடமையாற்றிய திரு. சுந்தரலிங்கம் வந்து தந்தை சவரிமுத்துவிடம் ஏதோ கதைக்கின்றார். தந்தை எல்லோரையும் படுத்துக் கொள்ளும்படி கூறுகின்றார். அவர்களுக்கு காவலாக நான்கு பொலிசார் அமர்த்தப்படுகின்றார்கள்.

ஒளி அமைப்பாளர் திரு.பராக்கிரமபாகு அவர்கள் சுத்தரலிங்கத்தினால் அழைக்கப்பட்டு ஸ்பொட்லைட்டை கோட்டையெங்கும் ஒளி தெரியும்படி வைத்து அந்த ஒளியிலேயே பலர் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். அனால் அந்த கலைஞர்கள் படுத்த படுக்கையை விட்டு காலை வரை எழும்பவேயில்லை. காலை ஆறுமணி இருக்கும் காக்கை குருவிகளின் சத்தத்தோடு இவர்களும் எழும்புகின்றார்கள். இரவு எண்ணற்ற மக்கள் உட்கார்ந்து பார்த்த மைதானத்தில் பல பிரேதங்கள் கிடத்தப்பட்டு கிடக்கின்றது. எதுவும் பேசமுடியாதவர்களாக சிலையாக நிற்கின்றார்கள் கலைஞர்கள். அன்றைய நிகழ்வுகளை நினைவு கூரும் போது கிறெகரி கூறியது.

“எங்களுடைய நாடகம் நடக்காமல் இருந்திருந்தால் சிலவேளை அவர்களுடைய போராட்டம் வெற்றியடைந்தும் இருக்கலாம். அது மாத்திரமல்ல நாடகத்துக்கு பாவித்த ஒளி அமைப்புத்தான் அவர்களைக் காட்டிக் கொடுத்தது. அவர்கள் போராட்டம் நியாயமானதோ நியாயமற்றதோ ஆனால் நாடகத்தை பார்க்க வந்தவர்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்காக தாமதப்படுத்தி மரணத்தை தழுவிக்கொண்ட அந்தத் தியாகிகளை என்றும் எங்களால் மறக்க முடியாது” என்று கூறினார் கிறெகரி.



படிப்பகம்

www.padippakam.com

# போட்டியும் பரிசும்:

கிறெகரியைப் பொறுத்த மட்டில் நாடகமானால் அதை முழுமையாகக் கொடுக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருப்பார். பணச்செலவை நினைத்து பாத்திரங்களுக்குரிய ஆடையையோ அல்லது காட்சி அமைப்பையோ செய்யாமல் விடுவதில்லை. அதிலும் போட்டிக்கென்று போய்விட்டால் கேட்கவா வேண்டும்.

1971 ஆம் ஆண்டு அரியாலையில் அகில இலங்கை ரீதியான ஒரு நாடகப் போட்டி. அந்த போட்டியில் கிறெகரி தங்கராசாவின் அரிச்சந்திரா மயான காண்டமும் ஒன்று.

போட்டிக்கு வந்த ஏனைய நாடகங்களோ ஒன்றுக்கொண்டு சளைத்தவையல்ல. கொழும்பில் இருந்து ஜனாதிபதி பரிசு பெற்ற நாடகமான "செவ்வானத்தில் ஒரு" என்ற நாடகம், அரியாலையிலிருந்து "பாதுகை" என்ற நாடகம் இன்று பாரிசில் சகலகலாவல்லவன் என்று அனைவராலும் போற்றப்படும் "கலைச்சிற்பி" சாம்சனின் தந்தை திருவாளர் திருச்செல்வம் அவர்கள் "கடமையின் காவலன்" இப்படியான புகழ்பெற்ற கலைஞர்கள் போடும் நாடகத்துடன் கிறெகரியின் "அரிச்சந்திரா மயான காண்டம்" நாடகமும் ஒன்று.

நடுவர்களாக அமர்ந்திருப்பவர்கள் கலையுலகில் அனைவராலும் மதிக்கப்படும் யாழ்.தேவன் மாஸ்ரர், யாழ்.சொக்கன்,கண்ணாடி வார்ப்புக்கள் புகழ் நிர்மலா நித்தியானந்தன் ஆகியோர்.

போட்டிக்கு வந்த நாடகங்கள் எல்லாம் காட்சி அமைப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பதை கண்ட கிறெகரிக்கு மனதுக்குள் ஒரு பயம் "நடிப்பில் தங்களை வெல்வது கஸ்ரம் ஆனால் காட்சி அமைப்பால் அவர்கள் கூடியபுள்ளிகளை எடுத்து தங்களை தோற்கடித்து விடுவார்களோ?" தனது சந்தேகத்தை நண்பன் இம்மானுவலுடன் பகிர்ந்து கொள்ள புதிய திட்டம் உருவாகின்றது. இவர்களின் நாடகத்தில் மயானம் தான் முக்கியமான காட்சி. உடனடியாக ஒரு பட்ட பூவரசமரம் இவர்களால் தறித்து வரப்பட்டு மேடையில் நிறுத்தப்படுகின்றது. சில ஆலமரக் கொப்புகள், அத்துடன் பார்ப்போரை வியக்கவைக்கும் வகையில் உண்மையான மயானம் போல் அரங்கம் காட்சியளிக்கின்றது.

அதிகாலை நான்கு மணிக்கு நடுவர்களின் பாராட்டுதலோடு கிறெகரி தங்கராசாவின் அரிச்சந்திரா மயான காண்டம் முதலாவது நாடகமாக அறிவிக்கப்பட்டு ஆயிரம் ரூபா பரிசும் அளிக்கப்படுகின்றது. நாடகத்தின்



படிப்பகம்

www.padippakam.com



*பாரிஸில்*
*அருட்திரு. நீ. மரியசேவியர் அடிகளுடன்*

பாரிஸில்
தனது நண்பன் பெஞ்சமின்
இமானுவேலுடன் கிறெகரி தங்கராசா.



பாரிஸ் - கலைக்கோயில் தயாரிக்கும் **பாசப்பூக்கள்** பூசையின்போது முகத்தார் ஜேசுரட்ணம் அவர்களுக்கு **கலைப்பூபதி** பட்டம் அளித்து கௌரவித்தபோது. , அருகே நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த மூத்த கலைஞர். ஏ. ரகுநாதன்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

வெற்றிக்காக தன்னுடன் உழைத்த நண்பன் இம்மானுவலை கட்டித் தழுவுகின்றார் கிறெகரி. திறமைக்கு பரிசு கிடைக்கும் போது ஆனத்தத்திற்கு நிகராக வேறென்ன இருக்கமுடியும். அது மாத்திரமா குரும்பசிட்டி சன்மார்க்க சபை நடாத்திய நாடக போட்டிகளில் எல்லாம் வெற்றிப் பதக்கத்தை வாங்கிய பெருமை கிறெகரிக்கு இருக்கின்றது. நாடகத்தில் மட்டுமல்ல 25.06.1968 ஆம் ஆண்டு திருகோணமலையில் நடந்த மெல்லிசைப் போட்டியில் அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் பா.நேமிநாதன் அவர்களால் முதல் பரிசைப் பெறுகின்றார்.

எத்தனையோ ஆயிரம் மைல்களைக் கடந்து பாரீஸ் வந்தும் பரிசுகளோடு கிடைத்த பாராட்டுப் பத்திரங்களை இன்றும் பாதுகாத்து வைத்திருப்பது தான் கிறெகரி கலைக்கு கொடுக்கும் மரியாதை.

## நடிகமணியைக் கண்டபோது:

சிறு வயதில் இருந்தே நடிகமணியின் ரசிகனாக இருந்த கிறேகரி தங்கராசாவிற்கு மேடையில் தான் கண்டு வரும் நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களை ஒரு தடவையாவது நேரில் பார்க்கவேண்டும் என்ற ஆசை ஒன்று இருந்தது.

சிறுவனாக இருந்தபோது கிறெகரிக்கு தெரியவில்லை பின்னாளில் கலா மேதையுடன் தான் இணைந்து நடிப்பேன் என்பது. பதினைந்து வயது சிறுவனாக இருந்த காலத்தில் பாசையூரில் நடந்த அரிச்சந்திர மயான காண்டம் நடந்த போது ஒப்பனை அரங்கிற்குள் மிகவும் சிரமப்பட்டு சென்று அந்த கலை மேதையை பார்த்த மகிழ்ச்சி கிறெகரிக்கு கடவுளைக் கண்டது போன்ற உணர்வாக இருந்தது.

இப்படி வைரமுத்துவை மானசீக குருவாக எண்ணிய இந்த நவயுக ஏகலைவன் பின்னாளில் பாடகனாக வந்தபின் பருத்தித்துறையில் நடந்த ஒரு மெல்லிசை நிகழ்சியில் அரிச்சந்திரா மயான காண்ட பாடல் ஒன்றை பாடுகின்றான் எதிர்பாராத விதமாக அங்கு வந்த நடிகமணி அவர்கள் இந்த பாடலை கேட்டு பரவசப்பட்டு மேடையை விட்டு கிறெகரி கீழே இறங்கிவரும் போது முதுகில் தட்டி பாராட்டுகின்றார். "இன்னும் நன்றாக சாதகம் செய் உனக்கு நல்ல எதிர்காலம் இருக்கின்றது." என்று அவர் கூறிய வார்த்தைகள் கிறெகரியை மெய்சிலிர்க்க வைக்கின்றது. தனது மானசீகக் குரு தன்னை வாழ்த்திவிட்டார். இந்த மகிழ்ச்சி பத்துமாதம் வயிற்றிலே தன்



படிப்பகம்

www.padippakam.com

குழந்தையை சுமந்த தாய் பிறந்த குழந்தையை முதன் முதலாகக் காணும்போது கிடைக்கும் சந்தோசத்திற்கு நிகரானது.
வைரமுத்துவாக தன்னை கற்பனை செய்து கொண்டு கிறெகரி மேடையேற்றிய அரிச்சந்திரா மயான காண்டம் நாடகம் பல பரிசுகளையும் பலரது பாராட்டுக்களையும் மட்டுமல்ல அந்த நாடகத்துக்கு சொந்தக்காரரான நடிகமணியின் பாராட்டைப் பெற்றபோது கிறெகரி அடைந்த மகிழ்ச்சியை சொல்லவே முடியாது. கிறெகரி மேடையேற்றிய அரிச்சந்திரா நாடகத்தின் வெற்றியில் பலருக்கு தெரியாத ரகசியங்கள் இருக்கின்றன. அது என்ன?

இன்று கிறெகரி தங்கராசாவின் கலைக்கோவில் மன்றத்தின் வெகுஜனத் தொடர்பாளராகஇருக்கும் பீலிக்ஸ் மனோதாஸின் தந்தையும் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பிரபல நாடகக் கலைஞனுமான திரு. சிங்கராயர் அவர்களை பற்றி முதலில் தெரிந்து கொள்ளவேண்டும்.
வைரமுத்து இளைஞனாக இருந்த காலத்தில் இராசரட்ணம் அவர்கள் போடும் நாடகங்களுக்கு ஆர்மோனியம் வாசிப்பதுதான் சிங்கராயர் அவர்களின் வேலை. இராசரட்ணம் அவர்களுடன் ஆர்மோனியம் வாசிப்பவராக பணிபுரிந்து பின்நாட்களில் அவரது நாடகங்களில் பிற்பாட்டுப் பாடியும் நடிக்கவும் ஆரம்பித்தார் வைரமுத்து. இராசரட்ணம் அவர்கள் நடித்த நாடகங்களில் அரிச்சந்திரா மயான காண்டம். அப்படிப்பட்ட பெரும் கலைஞர் இராசரட்ணம் அவர்கள் தான் கிறெகரியின் அரிச்சந்திராவில் சந்திரமதியாக நடித்தவர், சத்தியகீர்த்தியாக நடித்தவர் ஆண்டவர் என்றழைக்கப்படும் பெஞ்சமின் இம்மானுவேல் அவர்கள், ஐயராக நடித்தவர் இணுவிலைச்சேர்ந்த பிரபல வில்லுப்பாட்டுக் கலைஞரும் வானொலி நாடகக் கலைஞருமான வடிவேலு அவர்கள், லோகிதாசாக நடித்த சிறுவன் இணுவிலைச் சேர்ந்த பிரபல ஆர்மோணியக் கலைஞர் சரவணமுத்துவுக்கும் பிரபல நடிகை சந்திராவிற்கும் பிறந்த மைந்தனே., ஐயராத்துப் பிள்ளையாக நடித்தவர் பிரபல நகைச்சுவை நடிகர் டிங்கிரி அவர்கள், பக்கவாத்தியம் வாசித்தவர் ஒரு காலகட்டத்தில் மேடைகளில் கொடிகட்டிப்பறந்து கொண்டிருந்த சுதி மரியான் அவர்கள்.
இப்டியான திறமையான கலைமுத்துக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்தே அரிச்சந்திரா நாடகத்தின் வெற்றிக்கு வித்திட்டார்கள். ஒரு முறை கண்டாவளையில் கிறெகரியின் அரிச்சந்திரா மயான காண்டம் ஏற்பாடாகி



படிப்பகம்

www.padippakam.com

இருந்தது. விளம்பரம் பிரசுரம் தயாரித்தவர்கள் அரிச்சந்திரா என்றால் வைரமுத்து தானே நடிப்பார் என்று எண்ணி நடிகமணி வி.வி. வைரமுத்து நடிக்கும் அரிச்சந்திரா மயான காண்டம் என்று விளம்பரம் செய்து விட்டார்கள். ஊருக்குள் செல்வாக்கு மிக்க சிலர் வந்து நடிகமணி எங்கே என்று கேட்ட போது தான் இவர்களுக்கு விசயம் விளங்க ஆரம்பித்தது.

சிலர் வந்து "வைரமுத்து வராவிட்டால் வீண் பிரச்சனைகள் வரும்" என்றும் கூறத்தொடங்கினார்கள். கிறெகரியும் இம்மானுவலும் நிலமையை சாதுர்யமாக சமாளிக்கின்றார்கள். "அடுத்த பஸ்ஸில் அவர் வந்து விடுவார்." இப்படி சாட்டுக் கூறப்பட்டு நேரம் கடத்தப்படுகின்றன. நாடகம் ஆரம்பிக்கும் நேரத்திற்கு சற்று முன்னமாக இம்மானுவலும் கிறெகரியும் மட்டும் சற்றுத்தூரம் சென்று ஒரு காட்டுப்பகுதிக்குள் சென்று ஒப்பனை செய்து கொண்டு மேடைக்குப் பின்னால் அமர்ந்து விட்டார் கிறெகரி.

"வைரமுத்து வந்துவிட்டாரா" மீண்டும் அதே ஆட்கள், அதே கேள்வி.

"ஓம் அய்யா வந்து மேக்கப் போட்டுக்கொண்டு இருக்கிறார்." இம்மானுவேல் நெஞ்சு படபடக்க பயத்துடன் கூறுகிறார். அவர்கள் நேராக கிறெகரி இருக்கும் இடத்திற்கு செல்கின்றார்கள். "அய்யா உங்களுக்கு கோழி அடிச்சுப் போத்தலும் எடுத்து வைச்சிருக்கிறம் நீங்கள் இப்படி நேரம் செல்ல வந்து நிக்கிறியள்." அவர்கள் வைரமுத்து என்று எண்ணி கிறெகரிக்கு கொடுத்த மரியாதையை எழுத்துக்களில் வடிக்க முடியாது. "நாடகம் முடியட்டும் பிறகு பாப்பம்" ஒரு சில வார்த்தையோடு முடித்துக்கொள்கிறார் கிறெகரி.

நாடகம் ஆரம்பித்து விட்டது. நடிகமணியின் நடிப்பைக் காண மக்கள் கூட்டம் ஆவலோடு காத்திருக்கின்றது.

*யாரடி கள்ளி நீ தான் அடாது இந்த கானகத்துக்குள்*
*வளைந்து கூறடி உன் பெயரை...*

உச்ச தொனியில் இந்த பாடலைப் பாடியபடி கிறெகரி மேடைக்கு வருகின்றார். கரகோஷம் அடங்க இரண்டு நிமிடங்கட்கு மேல் சென்றது. இப்படி எல்லோரும் பாராட்டும்படி நாடகம் சிறப்பாக நடந்து முடிந்தபோது...

மீண்டும் அவர்கள் வருகின்றார்கள், வைரமுத்து அவர்களை மகிழ்விக்க வேண்டும் என்பதற்காக, ஒப்பனையை கலைத்து விட்டு கிறெகரி உண்மையை கூறுகின்றார்.

அவர்கள் அனைவரும் திகைத்துவிட்டார்கள். நடிகமணிக்கு நிகராக இன்னொரு நடிகனா? அவர்களால் நம்பமுடியவில்லை. அத்துடன் மகிழ்ச்சியும் கூட நடிகமணிக்கு கிடைக்கவேண்டியதைப் போன்ற மரியாதைகளும்,



படிப்பகம்

www.padippakam.com

உபசரிப்புகளும் இந்தக் கலைஞர்கட்கும் கிடைத்தபோது கிறெகரி அடைந்த மகிழ்ச்சி எல்லையற்றது.
மாநகர சபையில் லிகிதராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார் கிறெகரி. அங்கு அவரை லிகோரி என்றால் தான் தெரியும். கிறெகரியின் முழுப்பெயர் டேவிட் லிகோரி.
இலங்கை வானொலி மூலமாக மக்கள் மத்தியில் பிரபலமாகியிருந்தவரும் சிறந்த எழுத்தாளருமான திருவாளர் ராஜாஜெகஜோதி அவர்கள் ஒரு நாள் மாநகர சபைக்கு வந்து கிறெகரியைத் தேடுகின்றார். பலர் தெரியாது என்று கூறிவிடுகின்றார்கள். ஜெகஜோதியோ எப்படியும் கிறெகரியை சந்திக்க வேண்டும் என்று முடிவு செய்து தேடுதலை தொடர்கின்றார். தலைமை கணக்காளர் மூலம் லிகோரிதான் கிறெகரி என்பதை அறிந்து அவர் பணியாற்றும் இடத்திற்கு செல்கின்றார்.
“என் பெயர் ஜெகஜோதி நான் ஒரு கலைஞன். உங்களுடன் சற்றுப் பேசவேண்டும்.” ஜெகஜோதி தன்னை அறிமுகம் செய்து கொள்கிறார்.
ஆச்சரியம்! அத்தோடு ஆனந்தம் கிறெகரிக்கு வானொலி மூலமும் பத்திரிகைகள் மூலமும் அறிந்திருந்த அந்தக் கலைஞனைக் கண்டதில் ஆனந்தம். இவர் என்னைத் தேடிவரக் காரணம் என்ன? என்ற ஆச்சரியம். இதைவிட இன்னொரு ஆனந்தமான செய்தியை அவர் சொல்லப்போகின்றார் என்பது அப்போது கிறெகரிக்கு தெரியாது. ஜெனசோதி தொடர்ந்து சொல்கின்றார். “நான் அபாய அறிவிப்பு என்றொரு நாடகத்தைத் தயாரிக்கின்றேன் வைரமுத்து அய்யா அவர்கள் அதில் பிரதான பாத்திரத்தில் நடிக்கின்றார். இன்னொரு பிரதான பாத்திரத்தில் நீர் நடிக்க வேண்டும்”
“என்ன வைரமுத்துவுடன் இணைந்து நான் நடிப்பதா?” கிறெகரிக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. அந்த நடிகமேதையுடன் இணைந்து நடிக்க முடியுமா? என்ற தயக்கம். வைரமுத்து அய்யாதான் சொன்னார் அந்தப் பாத்திரத்துக்கு பொருத்தமானவர் நீர் தானென்று, நீர் மறுக்கக் கூடாது” ஜெகசோதி வற்புறுத்துகிறார்.
“என்ன நடிகமணி அவர்களை என்னை சிபாரிசு செய்தாரா?” கிறெகரியால் தான் கேட்பதையே தன்னால் நம்பமுடியவில்லை.
மகிழ்ச்சியோடு சம்மதம் கூறுகின்றார். சந்திப்புக்கு நாள் குறிக்கப்படுகின்றது. கீரிமலையில் வசிக்கும் பிரபல ஆர்மோனியக் கலைஞர் திருவாளர் பொன்னுச்சாமி அவர்கள் அவருடைய மூத்த மகள் கூட சிறந்த நடிகை பார்வதி சிவபாதம் அவர்கள். அவருடைய இன்னொரு மகள் சிறந்த



படிப்பகம்

www.padippakam.com



பாரிஸில் மேடையேறிய **ஒளிபிறந்தது** நாடகத்தில் டி. கிறெகரி

பாரிஸில் மேடையேறிய **காட்டிக்கொடுத்தவன்** நாட்டுக்கூத்தில் கலைஞர்கள் பெஞ்சமின் இமானுவேல், வண்ணைதெய்வம் ஆகியோருடன் டி. கிறெகரி தங்கராசா.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

நடிகை சகுந்தலா அவர்கள். இப்படியான ஒரு கலைக்குடும்பத்தின் வீட்டில் தான் நடிகமணியை சந்திக்கின்றார் கிறெகரி அவர்கள். மிகவும் பயத்துடனேயே உரையாடுகின்றார் கிறெகரி. ஆனால் நடிகமணி அவர்களோ "உன்னிடம் திறமை இருக்கின்றது. நீதான் கண்டிப்பாக நடிக்கவேண்டும்" என்ற கட்டளை இடுகின்றார். கிறெகரியும் ஏற்றுக்கொள்கின்றார். "அபாய அறிவிப்பு" என்ற நாடகம் உருவாகின்றது. அசலும் நகலும் இணைந்து நடித்த அந்த நாடகம் பல தடவைகள் மேடையேறியது.

நடிகமணியுடன் பழகிய அந்த பசுமையான நினைவுகளைக் கூறும்போது கிறெகரியின் கண்கள் கலங்குவதும் உண்டு. அந்த நடிகமணி மறைந்தாலும் இந்த நடிகமணி இன்னமும் அவரை மறவாது அவர் பாணியை அவர் பெயரை நிலைநாட்டுவது கிறெகரி அவருக்குக் காட்டும் மரியாதையே.

## சானா அவர்களோடு:

4வது தமிழாராட்சி மாநாடு நடப்பதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றது. பிரபல கட்டடக் கலைஞர் துரைராஜா அவர்கள் மாநாட்டின் செயலாளர். துரைராஜா அவர்கள் தயாரித்த குத்துவிளக்கு திரைப்படத்தின் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் நன்கு அறிமுகமான கலைஞர் திருவாளர் பேரம்பலம் அவர்கள். நண்பனும் ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியத் தலைவராக இருக்கும் திருஅரியநாயகம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் அந்த நாட்களில் சிறந்த நாடகங்களை தயாரித்து மேடையெற்றியவர். அரியநாயகம் அவர்கள் யாழ் நகர மண்டபத்தில் மேடையேற்றிய "யூலியசீசர்" நாடகம் பிரமாண்டமான வெற்றியைப் பெற்றது. அரியநாயகம் அவர்களுடன் இணைந்து பல நாடகங்கள் நடித்துள்ளார்.

திரு.பேரம்பலம் அவர்கள் மூலமாக தமிழாராட்சி மாநாட்டில் இவர்கள் நாடகம் போட ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. சாணக்கியனின் நாடகத்தை *வலை* என்ற பெயரில் மேடையேற்ற ஏற்பாடுகள் நடைபெற்றது. திரு.அரியநாயகம், திரு.இம்மானுவல், திரு. கிறெகரி ஆகியோருக்கு முக்கிய பாத்திரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. நாடகத்தை நெறிப்படுத்தியவர் பிரபல நடிகர் சானா அவர்கள். இலங்கை வானொலியில் ஒலிபரப்பான "லண்டன் கந்தையா" நாடகத்தைப் பற்றி அறியாதவர்கள் அனேகமாக யாரும் இருக்கமுடியாது. அவருடைய



படிப்பகம்

www.padippakam.com

இயக்கத்தில் தமிழாராட்சி மாநாட்டில் நடிக்கும் ஒரு சந்தர்ப்பம் இவர்களுக்கு. அதே நேரத்தில் தமிழாராட்சிமாநாட்டில் மேடையேற்றுவதற்காக அருட்தந்தை மரியசேவியர் தயாரித்துக் கொண்டிருக்கும் கலையும் காவியமும் என்ற நாடகத்தில் நடிப்பதற்கும் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிறார் கிறெகரி.

அன்று முதன்முதலாக சானா அவர்களை சந்திக்கப்போகின்றார் கிறெகரி. குத்துவிளக்கு பேரம்பலம் அவர்களுடன் C.T.B. செல்வராசா அவர்களின் இல்லத்திற்கு அழைத்து செல்லப்படுகின்றார். அரண்மனைபோன்ற அந்த பெரிய மாளிகைக்குள் தயக்கத்தோடு செல்கின்றார். சூரிய ஒளி அவரிடமிருந்துதான் வருகின்றதோ என்று ஆச்சரியப்படும் வகையில் ஒருவர் அமர்ந்திருக்கின்றார். அவர்தான் சானா என்ற பெரும் கலைஞர். இவர் வெள்ளைக்காரரோ என்று எண்ணும் அளவிற்கு பால்போன்ற வெண்ணிறம் கொண்டவர். அவர்களுக்கு அருகே அந்த நாடகத்தில் நடிக்கும் பிரபல நடிகை சுப்புலட்சுமி காசிநாதன் அவர்களும் அமர்ந்திருக்கின்றார்கள். இவர்களை சானாவுக்கு அறிமுகம் செய்து வைக்கின்றார் பேரம்பலம் அவர்கள்.

“ஏனப்பா நீங்களெல்லாம் சாப்பிடுவதில்லையா?” சானா கேட்கின்றார். அப்படியான ஒல்லியான உருவம் கிறெகரிக்கும் இம்மானுவேலுக்கும் . பாடச் சொல்கின்றார், நடித்துக் காட்டச் சொல்கின்றார் சானாவிற்கு ஆச்சரியம். “நீங்கள் ஆக்கள்தான் ஒல்லியாய் இருக்கிறீர்கள் உங்களிட்டை உள்ள திறமை பெரிசா இருக்கு” மகிழ்ச்சியுடன் கூறுகின்றார் சானா அவர்கள்.

“பழகுவதற்கு மிகவும் பண்பானவர். ஆனால் பழக்கும் போது மிகவும் கண்டிப்பானவர்.” என்று சானாவைப் பற்றி கூறுகிறார் கிறெகரி. மிகவும் சொற்ப நாள் பயிற்சி பெற்றேன். ஆனால் கடுமையான பயிற்சி. தன்னை இலக்கிய இயக்குனர்களில் அருட் தந்தை மரியசேவியருக்குப் பின் தனக்குப் படித்த இயக்குனர் சானாதான் என்று கூறுகின்றார் கிறெகரி. சானா அவர்களின் இயக்கத்தில் தமிழாராட்சி மாநாட்டில் “வலை” நாடகம் மேடை ஏறி மிகப் பெரிய வெற்றியைப் பெறுகின்றது. அந்த வெற்றிக்கு உழைத்தவர்களில் கிறெகரியும் ஒருவர்.



படிப்பகம்

www.padippakam.com



பாரிஸில் மேடையேறிய **கண்டி அரசன்** நாடகத்தில் கண்டி அரசனாக டி. கிறெகரி. (நடுவே)



பிரான்ஸ் தமிழ் கலைஞர் ஒன்றியத்தின் **இனிக்கும் இரவினிலே** நிகழ்ச்சியில் கிறெகரி தங்கராசா அவர்கள் பாடுகிறார்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## நாட்டுக்கூத்துச் சக்கரவர்த்தி பூந்தான் யோசேப்புடன்:

நாட்டுக்கூத்து பாடல்களின் நுணுக்கங்களை அடிமுதல் நுனிவரை கரைத்துக்குடித்தவர் பூந்தான் யோசேப்பு அவர்கள். அவருடைய பெருத்த உடம்மைப் போல பாடல்களை படிப்பதிலும் காட்டுவார். உச்ச சுருதியில் சத்தமாகப் பாடுவதிலும் அவருக்கு இணை அவர்தான். பூந்தான் மேடையில் தோன்றினால் தூங்கிக் கொண்டிருந்தவர்கள் துடித்துப் பதைத்து எழும்புவார்கள். அப்படியான புகழ் பெற்ற பெரும் கலைஞனுடன் இணைந்துபல நாடகங்களில் நடித்திருக்கின்றார் கிறெகரி.

நடிகர்களை இயக்குவதில் இவரும் திறமை மிக்கவர். “சஞ் சுவான்” என்ற நாடகம் தான் முதன்முதல் பூந்தானின் இயக்கத்தில் கிறெகரி நடித்தது. அவரே வியக்கும் வண்ணம் அவருக்கு நிகராக அதே சுருதியில் கிறெகரி பாடுவார். இதனால் கிறெகரியின் மீது அவருக்கு ஒருவிதமான பிடிப்பு ஏற்பட்டது. தொடர்ந்து செனகப்பு, ஜெனொவா, கருங்குயில் கொன்றத்துக் கொலை போன்ற பல நாடகங்களில் பூந்தான் யோசேப் அவர்களின் இயக்கத்தில் கிறெகரி நடித்திருக்கின்றார்.

இவரின் “இதயத்தில் உள்ளவள்” என்ற நாட்டுக்கூத்து இலங்கை வானொலியில் ஒலிப்பதிவு செய்யப்பட்டு ஒலிபரப்பானது குறிப்பிடத்தக்கது. இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் *இதயத்தில் உள்ளவள்* நாட்டுக்கூத்து ஒலிப்பதிவு செய்வதற்காக பூந்தான் யோசேப்பு தலைமையில் கலைஞர்கள் அங்கு நிற்கின்றார்கள் நாடகத்தை ஒலிப்பதிவு செய்வதற்கு பொறுப்பானவரான ஈழத்து இரத்தினம் அவர்கள் பூந்தான் யோசெப்புடன் அளவளாவிவிட்டு அந்த கலைக்குழுவில் மிகவும் மெல்லிய தோற்றத்தில் இருந்த கிறெகரியைப் பார்த்து “யார் இந்த பையன்” என்று புன்சிரிப்புடன் கூறிவிட்டு செல்கின்றார். நாடக ஒலிப்பதிவு நடைபெறுகின்றது. மேடையில் மட்டுமே பாடி நடித்த மற்றய கலைஞர்கள் வானொலிக்கு பாடலை ஒலிப்பதிவு செய்வது சற்று சிரமமாக இருக்கின்றது. அவர்கள் நடித்துக்கொண்டே பாடுவதால் ஒலிவாங்கியை விட்டு விலகிச் செல்வார்கள். இதனால் பல தடவைகள் மறுஒலிப்பதிவுகள் செய்யப்பட்டன. ஆனால் மேடையில் மெல்லிசைப் பாடல்கள் பாடியதில் கிறெகரிக்கு நல்ல அனுபவம் இருந்ததால் கிறெகரி சம்பந்தப்பட்ட காட்சிகள் ஒரே தடவையில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. அனைத்தும் முடிவடைந்த பின்



படிப்பகம்

www.padippakam.com

ஈழத்து இரத்தினம் அவர்கள் பூந்தான் யோசேப் அவர்களிடம் சென்று கிறெகரியின் திறமையை புகழ்ந்து பாராட்டினார். அதற்கு பூந்தான் யோசேப்பு அவர்கள் கூறியது "எங்கள் கலைக்குழுவிலேயே எனக்கு நிகராக பாடக்கூடிய ஒரு நடிகன் கிறெகரி தான்" என்றார்.

## அண்ணாவி திரேசம்மாவின் இயக்கத்தில்:

பூந்தான் யோசேப்பைப் போல பெண்கள் மத்தியில் சிறந்த அண்ணாவியாராகத் திகழ்ந்தவர் கொழும்புத்துறையைச் சேர்ந்த திரேசம்மா அவர்கள். குடும்பத்தைவிட கலைக்கே முதலிடம் கொடுத்தவர் திரேசம்மா அவர்கள் "பாலசூரன்" என்ற நாடகத்தில் திரேசம்மா அவர்களின் இயக்கத்தில் கிறெகரி நடிக்கின்றார். யாழ்ப்பாணத்திலுள்ள உள்ள விளான் என்ற இடத்தில் பாலசூரன் நாடகம் மேடை ஏறுகின்றது. அந்த நாடகம் அண்ணாவி திரேசம்மாவிற்கு மட்டுமல்ல கிறெகரிக்கும் பெரும் பாராட்டை பெற்றுக் கொடுத்தது.

## ஒப்பனைக் கலைஞர் பெஞ்சமினோடு :

யாழ்ப்பாணத்தில் நடிகர் என்று ஒருவர் இருந்தால் கண்டிப்பாக திரு.பெஞ்சமின் அவர்களின் கரம் முகத்தில் பட்டுத்தான் இருக்கவேண்டும். ஆம் யாழ்ப்பாணத்தில் அனைத்துக் கலைஞர்களுக்கும் தெரிந்த ஒரே ஒரு ஒப்பனையாளர் மதிப்புக்குரிய பெஞ்சமின் அவர்கள்தான்.

இந்த நடிகைகள் எல்லாம் கவர்ச்சியாக, அழகாக, பாத்திரத்துக்கு ஏற்றவகையில் பொருத்தமாக தோன்றுவதற்கு காரணமே ஒப்பனைக் கலைஞர்கள்தான். நடிகர்கள் புகழ் பெற்றுவிடுவார்கள். ஆனால் அந்த புகழுக்கு காரணமாக இருந்த ஒப்பனைக் கலைஞர்களை நினைவில் நிறுத்திக் கொள்பவர்கள் மிகவும் குறைவு. ஆனால் பெஞ்சமின் என்ற பெருமைக்குரிய அந்த ஒப்பனைக் கலைஞனை இன்றுவரை மறவாது நினைவில் வைத்துக் கொள்ளும் மிகச் சிலரில் கிறெகரியும் ஒருவர். பெஞ்சமினை மட்டுமல்ல அவர் மகன் இம்மானுவலையும் தான் கிறெகரியால் மறக்கமுடியாது.

கிறெகரியின் இருபத்தைந்து வருட கலை வாழ்வில் இருபத்தி



படிப்பகம்

www.padippakam.com

ஐந்து வருடங்களும் தொடந்து இணைந்து கலைப்பணி ஆற்றி வரும் ஒரே உயிர் நண்பன் இம்மானுவல் தான் பெஞ்சமின் அவர்கள். குடும்பத்தில் எல்லோருமே சிறந்த ஒப்பனைக் கலைஞர்கள்தான். இம்மானுவல் அவருக்கு அடுத்தவர் பெஞ்சமின் அவர்களின் வலதுகரமாகத் திகழ்ந்தவர் திரு.அன்ரன் அவர்கள். டன்சன் போன்றவர்கள் எல்லோருடைய கையும் கிறெகரியின் முகத்தில் தங்கள் திறமையைக் காட்டியிருக்கின்றது. ஆனால் இம்மானுவல் கூடுதலான காலம் தொடர்ந்து கிறெகரியுடன் கலைத் தொண்டாற்றியதால் இம்மானுவலின் சேவையே கிறெகரிக்கு பெரிதும் உதவியிருக்கிறது.

இம்மானுவலின் திறமையைப் பற்றி கிறெகரி ஒருமுறை கூறும் போது இப்படிச் சொன்னார்:

அரியாலையில் ஒரு அரங்கில் அரிச்சந்திரா நாடகம் நடைபெறப் போகின்றது. எல்லா கலைஞர்களும் ஒப்பனைசெய்து விட்டார்கள். ஆனால் அயலாத்துப்பிள்ளையாக நடிக்கும் டிங்கிரி மட்டும் இன்னமும் அரங்கிற்கே வந்து சேரவில்லை. நாடக அமைப்பாளர்கள் நாடகத்தை அரங்கேற்றும்படி அவசரப்படுத்துகிறார்கள். என்னால் எதுவுமே செய்யமுடியாத நிலமை. முதலில் அயலாத்துப் பிள்ளையாக நடித்துவிட்டு பின்னர் அரிச்சந்திரனாக நடிக்கிறேன். அதற்கு தகுந்தாற்போல் வேகமாக ஒப்பனை செய்யவேண்டும் என்றேன். நான் எண்ணியதைவிட வேகமாக ஒப்பனை செய்தது மட்டுமல்ல இரண்டு பாத்திரங்களை செய்தவர் ஒருவர் தான் என்பதை ரசிகர்களுக்கு தெரியாமல் திறமையாக ஒப்பனை செய்த பெரும் கலைஞன் இம்மானுவல்" இப்படிப் பெருமையுடன் இம்மானுவலின் திறமைகளை கூறுவார் கிறெகரி அவர்கள்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள் இம்மானுவலின் திறமைக்கு இது ஒரு சான்று.

யாழ்ப்பாணத்தில் அருட்தந்தை மரிய சேவியரின் பலிக்களம் நாடகம். பிலாத்துவாக கிறெகரி நடிக்கின்றார். மேடைக்கு மேல் ஒரு மேடை அமைத்து பிலாத்து மன்னனின் மாளிகை அமைத்திருந்தார்கள். சுமார் பதினைந்து அடி உயரமிருக்கும். மேடை அமைத்தவர்கள் சரியாக அமைக்கவில்லை. ஒரு பகுதி பலகைக்கு ஆணி வைக்க மறந்துவிட்டார்கள். ஆணி வைத்த பகுதியில் கிறெகரி மேடைக்கு வருவதற்காக ஏறுகின்றார். மறு பகுதி பலகை உயரமாக எழும் பதினைந்து அடி உயரத்தில் இருந்து கீழே விழுகின்றார் கிறெகரி. இதைக்கண்ட பெஞ்சமின் அவர்கள் துடிதுடித்துவிட்டார். கிறெகரியின் கையிலும், காலிலும் சிராய்ப்புக் காயங்கள். இரத்தம் கசிந்தது. இந்தச் சம்பவம்



படிப்பகம்

www.padippakam.com

பார்வையாளர்களுக்கு தெரியாது. காரணம் இனி மேல் தான் திரை விலக்கப்படப்போகின்றது. இவ்வளவும் திரை மறைவில் நடந்த சம்பவங்கள். விழுந்ததைப் பாற்றியோ, காயங்களைப் பற்றியோ சிறிதும் கவலைப்படவில்லை. நடிப்பதற்கு கிறெகிரி தயார். ஆனால் மேடை தயாரில்லை. எப்படியும் மேடையைச் சரிசெய்ய பதினைந்து நிமிடங்களாவது தேவைப்படும். பதினைந்து நிமிட நேர இடைவெளி விட்டால் நாடகத்தின் சுவாரஸ்யமே குன்றிப் போய்விடும் என்பது அருட் தந்தையின் கருத்து. உடனே பெஞ்சமின் அவர்கள் மேடையின் பின் மறுபக்கம் சென்று மேடைப்பலகைகளை ஒழுங்கு செய்துவிட்டு ஆணிக்குப்பதிலாக அவரே எல்லாப் பலகைகளையும் பிடித்துக்கொள்கின்றார். அந்தக் காட்சி முடியும்வரை வலிகளையும் மறந்து திறமையாக நடிக்கின்றார் கிறெகரி. மிகப்பெரிய விபத்து நடந்தும் பார்வையாளர்களுக்கு தெரியாமல் சமாளித்த திறமை பெஞ்சமினைச் சாரும். யாருக்கும் காட்டிக் கொள்ளாமல் நடித்த திறமை கிறெகரியைச் சாரும்.

திருவாளர் பெஞ்சமின், திரு.இம்மானுவல் இவர்களைப் பற்றி கூறுவது கிறெகரியின் கதை என்று ஒன்று இருந்தால் அதில் இவர்கள் இருவரின் பாத்திரமும் கண்டிப்பாக இருக்கும். அவர்கள் பெயர் அந்தக் கதையில் வராவிட்டால் கண்டிப்பாக என்னுடைய பெயர் வரவே முடியாது என்பார். அதனால்தானோ என்னவோ கிறெகரி தனது முதலாவது சங்கமம் வீடியோ பிரதியை வெளியிட்ட வைபவத்தில் இம்மானுவல் அவர்கட்கு கலைச்சந்திரன் என்ற பட்டமும் தங்கப் பதக்கமும் வழங்கி கௌரவித்தார்.

## நடிப்பில் மட்டுமல்ல இசையிலும் சாதனை:

நடிக்கும் திறன், பாடும் திறன் இரண்டும் இருந்த காரணத்தினால் தான் கிறெகரி நாட்டுக்கூத்து நாடகங்களில் புகழ் பெற முடிந்தது. நாட்டுக்கூத்து பாடல்கள் மட்டுமல்ல மெல்லிசை பாடல்கள் பாடுவதிலும் கிறெகரி திறமையானவர். ரமணியம்மாள் இசைக்குழுவில் தொடர்ந்து பாடி வந்தாலும் ஈழத்தின் புகழ் பெற்ற கண்ணன் குழு, இரட்டையர் குழு, அருணா குழு இப்படியான சிறந்த இன்னிசைக் குழுவில் எல்லாம் சிறப்புப் பாடகனாக பாடியிருக்கின்றார். புகழ் பெற்ற பாடகர்கள் அமுதன் அண்ணாமலை, ஸ்ரனி சிவானந்தன், கதிர் அமிர்தலிங்கம், ஈழத்து ரமணியம்மாள், கனகாம்மாள் சதாசிவம், ஈழத்து கோவிந்தராஜன் என்று அழைக்கப்படும் நாகர் கோவில் விஜயன், ஈழத்து



படிப்பகம்

www.padippakam.com

சௌந்தர்ராஜன் என்று அழைக்கப்படும் பொன்னம்பலம் நடா ஜெயதேவன் போன்ற பாடகர்களுடன் எல்லாம் இணைந்து பாடிய பெருமை கிறெகரிக்கு உண்டு.

யாழ் மாநகரசபை ஆணையாளராக இருந்த திரு. சிவஞானம் அவர்கள் தலைமையில் மெல்லிசை மன்னன் கண்ணன் இயக்கத்தில் உருவாக்கிய யாழ். மாநகரசபை இசைக்குழுவில் முன்னணிப் பாடகராக இருந்தவர் கிறெகரி தங்கராசா. யாழ். அரசடியில் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு போடப்பட்ட தண்ணீர்பந்தல் ஒன்றில் இனிமைக்குரலோன் கோண்டாவில் துரை அவர்களும் கிறப்புப் பாடகர்களாக இருக்கின்றார்கள். எட்டுக்கட்டை சுதியில் இவர் பாடுவார் என்று சிலரைப் பார்த்துக் கூறுவார்கள். ஆனால் கோண்டாவில் துரை பாடினால் ஆர்மோனியப்பெட்டியில் அதற்கு கட்டை இருக்காது. அவ்வளவு உச்ச சுதியில் அவர் பாடுவார்.

அப்பொழுது துரை பாடிக்கொண்டிருக்கின்றார்.

*மருதமலை மாமணியே முருகையா*
*தேவரின் குலம் காக்கும் வேலையா...*

ரசிகர்கள் ஆழ்ந்து ரசித்துக்கொண்டிருக்கின்றார்கள். பாடலின் உச்சக் கட்டம்

*பனி எது! மழை எது! நதி எது! கடல் எது! சகலதும் உனதொரு கருணையில் வருவது...*

துரையின் பாடலுக்கு விண்ணைப் பிளக்கும் கரகோசம் கிடைக்கின்றது. துரை பாடி முடிந்ததும் அதே பாடலை பாடும்படி ரசிகர்கள் கேட்கின்றார்கள். தர்மசங்கடமான நிலை கிறெகரிக்கு. காரணம் மேடையில் ஒருவர் பாடிய பாடலை அதே மேடையில் மற்றவர் பாடுவது அநாகரீகம். ஆனால் ரசிகர்கள் விடுவதாயில்லை. அன்புத் தொல்லை அதே போட்டியாகி விடுமோ என்ற கவலை கிறெகரிக்கு. அது மாத்திரமல்ல துரை பாடியது போல உச்ச தொனியில் பாடவேண்டும். மனதைத் திடப்படுத்திக் கொண்டு பாடுகின்றார். துரைக்குக் கிடைத்த அதேயளவு கரகோஷம் கிறெகரிக்கும் கிடைக்கிறது. இந்த சம்பவத்தை நான் நேரில் கண்டு ரசித்தவன்.

பாரிசில் உள்ள பலர் இதைப் பார்த்திருக்கமுடியாது. ஆனால் பலிக்களம் நாடகத்திற்காக துரை பாடிய இரத்தம்... இரத்தம்.. செக்கச் சிவந்த இரத்தம்... முத்துமுத்தான இரத்தம்...

இந்தப் பாடலை துரை பாடியது போல பாரிஸ் மேடைகளில் கிறெகிரி பாடுவதை பலர் பார்த்திருக்க முடியும்.

நடிப்பு, இசை இரண்டிலும் திறமைமிக்கவராக இருந்ததாலேயே நடிப்பிசைக்



படிப்பகம்

www.padippakam.com

காவலர் என்ற பட்டம் இவருக்கு மிக அழகாகப் பொருந்திக் கொண்டது போலும்.

## காலத்தை வென்றவன்:

1978 ஆம் ஆண்டு வவுனியாவில் பூவரசங்குளம் என்ற இடத்தில் கிறெகரியின் நாடகம். அன்றைய நாடகத்தில் சந்திரமதியாக நடிக்கவிருப்பவர் நடிகமணியின் அரிச்சந்திராவில் பல மேடைகளில் நடித்துப் புகழ்பெற்ற செல்வம் என்பவர்.

பகல் ஒருமணி யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு அனைத்து கலைஞர்களும் வந்துவிட்டார்கள். வழமையாக தாமதமாகவரும் டிங்கிரி கூட வந்துவிட்டார். ஆனால் செல்வம் மட்டும் வரவில்லை. ஒன்று முப்பது யாழ்தேவியில் ஏறினால் தான் வவுனியாவிற்கு சரியான நேரத்திற்கு போகமுடியும். என்னசெய்வதென்றே கிறெகரிக்குத் தோன்றவில்லை! செல்வம் வராவிட்டால் எப்படி நாடகம் போடுவது? உடனடியாக வேறு யாரையும் ஏற்பாடு செய்ய முடியாது. அப்படியான ஒரு இக்கட்டான நிலை. எல்லோரையும் பிளாட் போமில் நிற்கச் சொல்லிவிட்டு கிறெகரியும் இம்மானுவலும் புகையிரத வாசலில் வந்து வீதியையே பார்த்துக் கொண்டு நின்றார்கள். நேரம் ஒன்பது முப்பது பிளாட்போமிற்கு யாழ்.தேவி வந்துவிட்டது. இன்னும் ஐந்து நிமிடத்தில் புறப்பட்டு விடும். இம்மானுவலுக்கு கிறெகரி கூறுகின்றார்: “நீ மற்றவர்களை அழைத்துக் கொண்டு யாழ். தேவியில் போ, நான் எப்படியாவது ஒரு நடிகருடன் காரிலாவது வவுனியாவிற்கு வருவேன்” என்று இம்மானுவலும் மற்றவர்களும் யாழ். தேவியில் ஏறிவிட்டார்கள். யாழ். தேவி புறப்படுவதற்கான முதல் விசில் ஊதிவிட்டது. அதோ நண்பர் ஒருவரின் சைக்கிளில் வருகின்றார் செல்வம். ஓடிச்சென்று செல்வத்தின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஓடுகிறார் கிறெகரி. இரண்டாவது விசில் ஊதி யாழ்தேவி நகர்ந்து கொண்டிருக்கிறது. துரத்திக் கொண்டு ஓடிவந்து செல்வத்தையும் யாழ்தேவியில் ஏற்றிவிட்டார். கிறெகரி ஏறும் போது கால் தடக்கி விட்டது. என்ன பயங்கரம் ஆ... ! சத்தம் கிரகரி கீழே விழப்போகிறார். இம்மானுவல் கிறெகிரியின் கையையும் செல்வம் சேட்டையும் எட்டிப் பிடிக்கின்றார்கள். ஒருநிமிடத்தில் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட கிறெகரி கைகளால் கதவுப் பிடியைப் பிடித்துக் கொண்டு உள் எழ ஏறுகின்றார். அந்த ஒருநொடி தவறியிருந்தால் கிறெகரி



படிப்பகம்

www.padippakam.com



பாரிஸ் தமிழர் கல்விநிலையம் நடாத்திய நாடகப்போட்டியில் சிறந்த இயக்குனருக்கான பரிசினை, கல்விநிலையக்காப்பாளர் - அதிபர் சி. காராளபிள்ளை அவர்களிடமிருந்து திரு. கிறெகரி பெற்றுக்கொள்கிறார்.

தனது கலைக்குழாமின் ஒரு பகுதியினருடன் திரு. கிறெகரி.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

என்ற கலைஞன் இன்று உயிரோடு இருந்திருக்கமாட்டார். இதே போன்று கலைக்காக காலனிடமிருந்து தப்பிய சம்பவம் ஒன்று பாரிசிலும் நடந்தது. 11.04.93 பலிக்களம் நாடகம் பாரிசில் நடப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முக்கிய பாத்திரமான பிலாத்துவாக நடிக்கும் கிறெகரி அவர்கட்கு ஒருவாரத்துக்கு முன்பாக மார்பு வலி ஏற்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுவிட்டார். சக கலைஞர்கட்கெல்லாம் கவலை. ஒருமாததிற்கு கட்டிலை விட்டு இறங்கக்கூடாது என்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள். "கிறெகரி உம்மால் முடியாது என்றால் உம்முடைய பாத்திரத்துக்கு வேறு யாரையாவது ஏற்பாடு செய்கிறேன்." இயக்குனர் சூரி அவர்கள் கூறுகிறார். "நான் நடிப்பேன்" கிறெகரியின் வார்த்தையில் உறுதி "தனது குடும்பத்தில் ஒரு திருமண நிகழ்ச்சி தான் கண்டிப்பாக நிற்கவேண்டும்" என்று டாக்டரிடம் கேட்கிறார் கிறெகரி. டாக்டர்கள் மறுத்துவிட்டார்கள். கிறெகரி பிடிவாதம் பிடிக்கிறார். தான் போகத்தான் வேண்டும் என்று அந்த நோயாளியை அனுப்ப மனமின்றி உத்தரவு கொடுக்கிறார்கள். ஒரு நிபந்தனையுடன். அது என்ன நிபந்தனை? காலை பத்துமணிக்குப் போய் இரவு பத்துமணிக்கு கண்டிப்பாக வந்துவிடவேண்டும் என்பதுதான் அந்த நிபந்தனை. டாக்டர்கள் கட்டிலைவிட்டு இறங்க அனுமதிக்காத ஒரு மார்பு வலி நோயாளி கலைக்காக இல்லாத பொய்யைச் சொல்லி வந்து வீறாப்பாக நடித்துக்கொண்டிருக்கிறார் என்றார். இவர் கலைக்குக் கொடுக்கும் மரியாதைதான் எவ்வளவு உயர்ந்தது. அன்று நடந்தது யேசுநாதரின் திருப்பாடுகளின் காட்சி. அவரின் கலை ஆர்வத்தைக் கண்டு கர்த்தரே அவருக்கு ஆசி கொடுத்தாரோ என்னவோ! சில நாட்களிலேயே நல்ல குணமடைந்து வீடுவருகிறார் கிறெகரி. இப்படி கலைக்காக பல இன்னல்களைப் பட்டு காலத்தை வென்றவன் கிறெகரி.

## கலைவாழ்விலிருந்து இல்வாழ்விற்கு:

கலையை காதலித்துக் கொண்டிருந்த கிறெகரிக்கு வாழ்க்கையிலும் காதல் மலந்தது. றோசா ஸ்ருடியோ பப்பா யோசேப் அவர்களின் மகள் குயீன் மேரி அவர்கள் 21.06.70 ல் திருமதி குயின் மேரி கிறெகரியாகிறார். இவர்களின் இனிமையான இல்வாழ்வில் உஜித்தா, விஜித்தா என்ற இரண்டு



படிப்பகம்

பெண்பிள்ளைகளும், குயின்ஸ், பிறின்ஸ் என்று இரண்டு ஆண்பிள்ளைகளும் பிறந்தனர். நாட்டில் நடந்த அவலங்கள் கிறெகரியை பிறந்த தாய் மண்ணை விட்டு புலம்பெயர வைக்கிறது. எண்பத்தியோராம் ஆண்டு நவம்பர் மாதம் தனது தாய் மண்ணைவிட்டு புறப்படுகிறார் கிறெகரி. பாரிஸ் மாநகரம் அவருக்கு தஞ்சம் கொடுக்கிறது. ஆனால்: அதே வேளையில் அவரது கலைவாழ்வில் தடங்கல் ஏற்படுகிறது. ஏன்?

## பாரிசில் கலைப்பயணம்:

அலைகளை எழுப்பாதே என்று கடலுக்கு சட்டம் போட முடியுமா? அதே போன்றுதான் கலைஞனும். காற்றின் வேகம் குறைந்த நாட்களில் சில சமயம் கடலலைகள் அடங்கிக் கிடப்பதுண்டு. காலத்தின் மாறுதல் கலைஞனைக் கட்டிப்போடுவதும் உண்டு. அப்படித்தான் கிறெகரியும் நான்கு வருடங்கள் எந்த மேடையிலும் தோன்றாமல் ஒதுங்கி இருந்தார். கடன் தொல்லைகள் குடும்பத்தைப் பிரிந்திருந்த வேதனை, தந்தை, தாயார் இறந்த கவலை இவையெல்லாம் கிறெகரியின் கலை வாழ்விற்கு ஒரு தடைக்கல்லாக அமைந்தது. ஆனால் அந்த தடை ஒரு இடைக்கால தடைதான். அந்த தடையை உடைத்து மீண்டும் கிறெகரியை களத்துக்கு அழைத்து வந்த பெருமை கிறெகரியின் மதிப்புக்குரிய நண்பர்கள் எஸ்.கே.ராஜன், அருள் மாஸ்ரர், பெஞ்சமின் இமானுவல் ஆகியோரையே சாரும்.

சங்கே முழங்கு என்ற கலைநிகழ்சிக்காக அருந்ததி அவர்கள் *பரிணாமம்* என்ற நாடகத்தை நாட்டுக்கூத்து வடிவில் எழுதிவிட்டு அதில் நடிப்பதற்கு நடிகர்களைத் தேடிக்கொண்டிருந்தார். பாரிசில் நாட்டுக்கூத்து கலைஞர்கள் பலர் இருந்தாலும் முதலில் வரும் பெயர் கிறெகரி தங்கராசாவினுடையதாகத்தான் இருக்கும். திருவாளர்கள் எஸ்.கே.ராஜனும், அருந்ததியும் கிறெகரியைச் சந்திக்கின்றார்கள். அடைபட்டிருந்த கலையுணர்வுகள் கிறெகரியின் மனதில் இருந்து உடைபட்டு வெளியேறுகின்றது. கிறெகரியும் இம்மானுவலும்மாக சேர்ந்து பரிமாணத்திற்கு புதிய பரிணாமம் கொடுத்து மேலும் மெருகூட்டுகின்றார்கள். பரிணாமத்தில் அரக்கனாகத் தோன்றி பார்ப்போரை வியப்பில் ஆழ்த்தி பலரின் பாராட்டையும் பெறுகின்றார் கிறெகரி. தொடர்ந்து *வியாபகம்* நாடகத்தில் வித்தியாசமான பாத்திரத்தில் நடிக்கின்றார்.

இலங்கை கலையகம் நடாத்திய *கலையமுதம்* நிகழ்ச்சியியே

அரியாலை வைரவிழா குழுவினர் அகில இலங்கை ரீதியில் நடாத்திய நாடகப்போட்டியில் முதற்பரிசுபெற்ற **அரிச்சந்திர மயானகாண்டம்** பாரிஸில் மேடையேற்றப்பட்டபோது நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஈழத்துக்கலைஞர் அண்ணைறைற் கே. எஸ். பாலச்சந்திரனுடன் கலைஞர். கிறெகரி.



ஜேர்மனியில் அபிராமி வர்த்தக ஸ்தாபனத்தினர் நடாத்திய ஜீவகானப்போட்டியில் **கானக்குயில்** பட்டம் பெற்ற டி. கிறெகரி அவர்கள் ஈழநாடு ஆசிரியர் திரு. குகநாதன், சுங்கீதபூசணம் சுபாஸ் சந்திரன் ஆகியோருடன்





www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

பாரிசிலும் அரிச்சந்திர மயானகாண்டம் நாடகத்தை மேடையேற்றுவதாகக் கூறிவிட்டார். ஆனால் அதற்குப் பின்னால் வரப்போகும் கஸ்ரங்களை அப்பொழுது கிறெகரிக்கு தெரியவில்லை. கிறெகரியின் மானசீகக் குருவான நடிகமணி அவர்கள் ஒரு தடவை நாடகத்திற்கு நடிக்க ஒத்துக்கொண்டுவிட்டார். ஆனால் சந்திரமதியாக நடிப்பதற்கு பெண்நடிகை கிடைக்கவில்லை அன்றைய நாடகத்தில் சந்திரமதியாக வைரமுத்துவுடன் நடித்தவர் வைரமுத்துவின் மகள்தான். அதே போன்ற நிலை கிறெகரிக்கு! அந்த கஷ்ரமான நேரத்தில் கிறெகரிக்கு கை கொடுத்தவர் கிறெகரியின் புதல்வி உஜித்தா தான். இதில் உள்ள சிறப்பு என்னவெனில் இலங்கையில் சத்தியகீர்த்தியாக இணைந்து நடித்த அதே இமானுவல் தான் இங்கும் சத்தியகீர்த்தி. கிறெகரியின் மூத்த மகள் மேரி ஜெனற் உஜித்தா சந்திரமதியாக நடிக்கிறார். தந்தையும் மகளும் போட்டி போட்டு நடிக்கின்றார்கள். "காக்கை அடை காக்க குயில் குஞ்சு பொரிக்கலாம், ஆனால் புலி குட்டி போட்டால் பூனையா பிறக்கும்?" அவ்வளவு சிறப்பாக நடித்தார் கிறெகரியின் மகள் உஜித்தா. பாரிஸ் வீடியோ மலர் ஆசிரியர் திரு.பிலிப் தேவா அவர்கள் நடாத்திய இனிக்கும் இரவினிலே நிகழ்ச்சியில் *பாதுகை* என்ற நாடகத்தை மேடையேற்றுகின்றார். இந்த நாடகத்திலும் ஒரு சிறப்பு. என்ன சிறப்பு? பிலிப் தேவாவை இந்த நாடகத்தில் இராமராக நடிக்க வைக்கிறார். தொடர்ந்து வந்த இனிக்கும் இரவினிலே நிகழ்சியில் கண்டி அரசன் என்ற இசை நாடகத்தை மேடையேற்றுகின்றார். அந்த மேடையிலே பாரிஸ் தமிழ்க் கலைஞர் ஒன்றியத்தின் சார்பில் நடிப்பிசைக் காவலர் என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கின்றார்கள்.

இன்று கிறெகரி என்றால் தெரியாதவர்களும் நடிப்பிசைக் காவலர் என்றால் யார் என்று தெரிந்து கொள்ளும் அளவிற்கு அந்தப் பட்டம் அவருக்கு பொருந்தியிருக்கிறது என்றால் அதற்கு காரணம் அந்த பட்டத்தை பெறக்கூடிய தகுதி கிறெகரிக்கு இருந்ததுதான். கிறெகரிக்கு புகழ் தேடித்தந்த இன்னொரு நாடகம் கிறெகரியின் அருமை நண்பரும் ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியத் தலைவருமான திரு. அரியநாயகம் அவர்கள் மேடையேற்றிய "சொந்த மண்" நாடகம் மேடையேறிய போது யாழ்ப்பாண மன்னன் சங்கிலியனாக நடித்து அனைவரது பாராட்டையும் பெற்றார் கிறெகரி. அது மாத்திரமல்ல நாட்டுக்கூத்தைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருக்கும் கிறெகரியின் பால்ய நண்பன் கிறெகரி கிறிஸ்ரியன் அவர்கள் தயாரித்த காட்டிக் கொடுத்தவன் நாடகத்தில் சங்கிலியனாக மாறுபட்ட கோணத்தில் நடித்தார்.



படிப்பகம்

www.padippakam.com

ஆம் சொந்த மண்ணில் வந்த சங்கிலியன் ஒரு கற்பனைப் பாத்திரம், காட்டிக் கொடுத்தவனில் வந்த சங்கிலியன் உண்மை. சரித்திரம் அதனை நாட்டுக்கூத்து வடிவில் அமைத்திருந்தார் கிறெகரி கிறிஸ்ரியன் அவர்கள். அந்த நாடகம் இரண்டும் கிறெகரிக்கு பெரும் புகழைத் தேடிக்கொடுத்தது. கிறெகரியின் கலைப்பணி பாரிசில் நாடகங்களுடன் நின்றுவிடவில்லை. இசையிலும் தொடர்ந்து கொண்டே சென்றது.

## மெல்லிசையில் கிறெகரியின் கலைப்பணி:

கலையுலகில் இருந்து மறைந்து வாழ்ந்த கிறெகரியை மேடையில் கண்டுவிட்டார் அவரது இனிய நண்பன் மண்டலேஸ்வரன். விட்டுவிடுவாரா பின்பு. இலங்கையில் மண்டலேஸ்வரன் இசைக்குழு புகழுடன் விளங்கிய காலத்திலேயே மண்டலேஸ்வரனுடன் இணைந்து பல மேடைகளில் பாடியவர் கிறெகரி. மீண்டும் பாரிசில் மண்டலேஸ்வனுடன் இணைந்து கொள்கிறார். இசையில் பல வித்தைகளை செய்து வரும் பஞ்சவர்களும் கிறெகரியை விட்டுவைக்கவில்லை. பிரியாலயம் இசைக்குழுவின் தலைவர் துரைஸ் அவர்களின் அழைப்புக்கு இணங்கி ஜேர்மனி வரை சென்று தன் திறமையைக் காட்டினார். இருந்தும் கிறெகரியின் கலைப் பசிக்கு இந்தத் தீனி போதவில்லை. தானே ஒரு இசைக் குழுவை தோற்றுவித்தார். இசைத்துறையில் வித்தகர்களான பலரை தன் குழுவில் இணைத்துக் கொண்டார். திறமையாளர்கள் எங்கிருந்தாலும் அவர்களைப் பயன்படுத்திக் கொள்வதில் கிறெகரிக்கு நிகராக யாருமே இருக்கமுடியாது.

எட்டாவது “இனிக்கும் இரவினிலே” நிகழ்ச்சியில் இவர் நிகழ்த்திய வித்தியாசமான இசை நிகழ்சியில் அருட்தந்தை போல்ராஜ் அவர்கள் கிற்றார் வாசிக்கிறார். மிருதங்க வித்துவான் எம்.விஜயராஜா, பிரஞ்சுக் கலைஞர் பியார் அவர்கள் கடம் வாசிக்க, பாண்டிச்சேரி கலைஞர் முத்து அவர்கள் மோட்சவ் வாசிக்கின்றார். இவர்களோடு கிறெகரி பாட இணைந்து தமிழ்நாட்டைச் சேர்ந்த மெல்லிசைப் பாடகி பானு அவர்களும் பாடுகின்றார். புதுமையான இந்த இன்னிசை நிகழ்சியை ரசித்த ரசிகர்களின் கரகோசத்தால் அரங்கம் அதிர்கிறது. ஈழநாடு ஆசிரியர் எஸ்.எஸ்.குகநாதன், கலைஞர் தயாநிதி ஆகியோர் மாலை அணிவித்து கௌரவிக்கின்றார்கள். கொங்கூட் சேவிஸ் அதிபர் திரு.லூக்காஸ் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கின்றார். பாரிஸ் கிறீன் கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் மாலை அணிவித்து



படிப்பகம்

www.padippakam.com

வாழ்த்துகின்றார்கள். அந்தக் காட்சி காணக் கிடைக்காத கண்கொள்ளாக் காட்சியாக அமைகின்றது. இசை அரசனின் பரவசத்திற்கு கேட்கவும் வேண்டுமா?

## வானொலியில் கிறெகரி:

இலங்கை வானொலி மூலம் இலட்சக்கணக்கான மக்களை தன் இனிய குரலால் மயக்கிய கிறெகிரி பாரிஸ் மக்களையும் விட்டு வைக்கவில்லை. திரு அரியநாயகம் அவர்களின் நெறியாழ்கையில் சொந்த மண் என்ற தொடர் நாடகம் பாரிசில் பலவாரங்களாக ஒலிபரப்பப்பட்டது. அதில் சங்கிலியன் உட்பட பல பாத்திரங்களில் நடித்து பாராட்டுப் பெற்றவர் கிறெகரி. அந்த நாடகத்தில் கிறெகரி பேசிய வீர வசனங்கள் இன்றும் என்காதில் ரீங்காரமிட்டுக் கொண்டேயிருக்கின்றது. அப்படியொரு சிம்மக் குரல் கிறெகரிக்கு.

பாரிஸ் முத்தமிழ் மன்றம் நடாத்திய வானொலி சேவையில் இசையும் கதையும் நிகச்சிக்கு கிறெகரிதான் பொறுப்பாளராக இருந்தார். வெள்ளிக் கிழமை வந்தால் கிறெகரியின் இசையும் கதையும் கேட்பதற்கென்றே ரசிகர்கள் காத்திருப்பார்கள். கலையரசன் என்ற புனைபெயரில்தான் கிறெகரியின் நிகழ்சிகள் அமையும். அது மாத்திரமல்ல செவ்வாய்க் கிழமைகளில் கலைக்கதம்பம் என்ற நிகழ்சியை தயாரித்தளித்து ரசிகர்களிடம் பெரும் ஆதரவைப் பெற்றார்.

ஒரு தமிழ் புத்தாண்டு தினத்தன்று வானொலியில் நேரடி நிகழ்சிகள் நடைபெறுகின்றது. இரா.குணபாலன், பிரியாலயம் துரைஸ் போன்றவர்கள் தங்கள் நகைச்சுவை நிகழ்சியினால் ரசிகர்களை வயிறு குலுங்க சிரிக்க வைக்கின்றார்கள். மண்டலேஸ்வரன் தனது இன்னிசை நிகழ்சியால் ரசிகர்களை மயக்க வைக்கிறார். இறுதியில் கிறெகரி தங்கராசாவும் இம்மானுவலும் அரிச்சந்திரா மயான காண்டத்தில் ஒரு காட்சியைப் பாடி ரசிகர்களைக் கலங்க வைத்துவிட்டார்கள். அந்நிகழ்சியைப் பார்க்க வந்திருந்த பிரபல எழுத்தாளர் அகஸ்தியர் அவர்கள் கண்ணீர் சிந்தியபடி கட்டிப் பிடித்து கிறெகரியையும் இம்மானுவேலையும் பாராட்டிய காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

இலங்கைக் கலையகம் நடாத்திய தமிழமுதம் வானொலி நிகழ்சியில் அதன் அமைப்பாளர் எஸ்.கே.ராஜென் அவர்கள் கிறெகிரியை பேட்டி கண்டு ஒலிபரப்பியது நாங்கள் பெருமைப்பட வேண்டிய ஒன்று. இப்படி பல துறைகளிலும் வித்தகராக விளங்கும் கிறெகரியின் திறமைக்கு சான்று தொடர்ந்து வரும்



படிப்பகம்

www.padippakam.com

சங்கமம் வீடியோப் பத்திரிகை.

## இது முடிவுரையல்ல:

வானத்திற்கு முடிவில்லை, காலத்தின் பயணத்திற்கு முடிவில்லை, அன்பிற்கு முடிவில்லை, ஆசைக்கு முடிவில்லை, இன்பத்திற்கு முடிவில்லை, இப்படி முடிவில்லாத விடயங்கள் எத்தனையோ உண்டு. அதே போல் ஒரு கலைஞனின் கலைப்பணிக்கும் முடிவில்லை. நாங்கள் எண்ணிக் கொள்ளலாம் இவ்வளவு சாதனைகள் சாதிக்கின்றாரோ கிறெகரி என்று. ஆனால் சாதனை புரிவதற்கு இடப்படும் அத்திவாரம் தான் இந்த வெள்ளிவிழா இவர் இன்னும் பல சாதனைகள் புரிய வேண்டும் என்பது என் அவா. ஐம்பது வயதாகிவிட்டதே இனி என்ன சாதனையை இவர் சாதிக்கப்போகின்றார் என்று யாராவது கேட்கலாம். நல்ல கலைஞனுக்கு வயது ஒரு தடவையல்ல கலைப்பணி புரிய புரிய அவன் மனதால் இளைஞனாகிக் கொண்டே வருகின்றான். மனிதனுக்கு வயது கூடும் முதுமை தோன்றும் ஆனால் மனதிற்கு வயது கூடுவதில்லை. அதிலும் கலைஞனின் மனம் என்றும் இளமை தான். ஐம்பத்தைந்து வயதிலும் இருபத்தைந்து இளைஞனைப் போல கிறெகரி துள்ளித்துடித்து நடிப்பதே இதற்கு சாட்சி. வயதால் பொன்விழாவும் கலையால் வெள்ளி விழாவும் காணும் கிறெகரி கலைக்குக் கொடுக்கும் மதிப்பை அவரின் குடும்பத்திலேயே காணலாம்.

ஒரு மகன் சிறந்த ஓர்கன் வாத்திய கலைஞனாக வருகின்றான். இசை அரசன் பஞ் அவர்களின் மாணவன். இன்னொரு மகன் பரதக் கலையில் வித்தகர். பிரபல நாட்டியப் பேராசிரியை சங்கீத பூஷணம் திருமதி ராஜேஸ்வரி அவர்களின் மாணவன். ஒரு மகள் நாம் அறிந்த சிறந்த நடிகை. இன்னொரு மகள் கர்நாடக இசையை கற்று வருகின்றார். இலங்கை வானொலி புகழ் சங்கீத பூஷணம் எம்.எஸ்.குலசீலநாதனின் மாணவி இவள். இப்படி அனைத்துப் பிள்ளைகளும் கலைச்சுடர்களே. கிறெகரியின் பெயர் சொல்ல ஒருவுர் மட்டுமல்ல அனைவருமே தயாரி வருகின்றார்கள். இப்படியான கலைஞனின் கலைப்பணிக்கு முடிவு ஏது. ஐயாயிரம் மேடைகள் கண்டது கிறெகரிக்கு சாதனை அல்ல. இன்னும் பல ஆயிரம் மேடைகளில் இவர் சாதனை புரிய வேண்டும். பல சாதனையாளர்களை இவர் உருவாக்கவேண்டும். இந்த சாதனையாளன் தனது கதையின் இரண்டாவது பாகத்தை எழுதும் சந்தர்ப்பத்தை மீண்டும் எனக்குத் தரவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

காலங்கள் காற்றாடியாக சுழலும் போது சில காட்சிகள் மாறலாம். ஆனால் ஒரு கலைஞனின் எண்ணங்கள், சிந்தனைகள் என்றுமே மாறுவதில்லை. வயது கூட கூட இன்னும் புதுமைகள் புரியவேண்டும் என்ற ஆர்வமே கலைஞனிடம் மேலோங்குகிறது. அந்த எண்ணங்களை செயல் வடிவமாக காட்டி இன்னும் பல சாதனைகளை அவர் சாதிப்பார் என்று எம்மைவிட திடமாக நம்புகிறார் கிறெகரியின் மனைவி திருமதி குயீன் மேரி கிறெகரி அவர்கள். அவரின் ஆசை நிறைவேற நாமும் வாழ்த்துவோம்.

## கிறெகரி தங்கராசா அவர்களின் கலை வாழ்வு குறிப்புகள்

(முக்கியமானவை மட்டும்)

**சமூக நாடகங்கள்**

* மானம் பெரிது
* சந்திரனே சாட்சி
* இறைவன் இருக்கின்றானா?
* இரத்தத் திலகம்
* உயர்ந்த உள்ளம்
* மலர்ந்த காதல்
* ஆனந்தக் கண்ணீர்
* ஒளி பிறந்தது
* வழக்கறிஞன் (திருகோணமலையில்)
* சமூகத்துரோகி (மட்டக்களப்பில்)
* வியாபகம் (பாரிசில்)

**சமய நாடகங்கள்**

* ஊதாரிப்பள்ளை (சிறந்த நடிகருக்கான பரிசு கிடைத்தது)
* யேசுவின் திருப்பாடுகளின் காட்சி
* எழுதிய கரம்
* கதையும் காவியமும் (யாழ்.தமிழாராய்ச்சி மாநாட்டில்)



படிப்பகம்

www.padippakam.com

* வா மகனே வா (திருச்சி தேவர் அரங்கில்)
* களங்கம்
* பலிக்களம் (இலங்கை, பாரிஸ்)

## இசை நாடகங்கள்

* மயான காண்டம் (அகில இலங்கை ரீதியாக முதல் பரிசு பெற்றது)
* மனம் திருந்திய சவுல்
* யோசவாஸ்
* பரிணாமம் (பாரிஸ்)
* கண்டி அரசன் (பாரிஸ்)
* அபாய அறிவிப்பு (நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களுடன்)

## சரித்திர நாடகங்கள்

* செஞ்சோற்றுக் கடன் (கும்பகர்ணனின் கதை)
* மானம் காத்த மறவன்
* பாதுகை (பாரிஸ்)
* சாணக்கியன் (யாழ். தமிழாராட்சி மாநாட்டில்)

## நாட்டுக்கூத்து

* பாலசூரன்
* ஜெனோவா
* செஞ்யோவான்-பூந்தான் யோசேப் இயக்கத்தில்
* சகோதர விரோதி
* செனகப்பு
* கருங்குயில் குன்றத்து கொலை - பூந்தான் யோசேப் இயக்கத்தில்
* காட்டிக் கொடுத்தவன். (பாரிஸ்)

## கிறெகரி இணைந்து நடித்த பிரபல நடிகர்கள்



படிப்பகம்

www.padippakam.com

* நடிகமணி வி.வி.வைரமுத்து
* பூந்தான் யோசப்
* நாவாந்துறை பெலிக்கான்
* பாஷையூர் கணசிங்கம்
** சின்னக்கிளி
* அருமைத்துரை
* மரியதாஸ்
* பிரான்சிஸ் ஜெனம்
* குத்துவிளக்கு பேரம்பலம்
* சுப்புலட்சுமி காசிநாதன்
* குருநகர் அன்ரன்
* உடையார் யேசுதாசன்
* பாஷையூர் ஆரம் மாஸ்ரர்
* டிங்கிரி சிவகுரு
* ஏ.ரகுநாதன்
* இணுவில் சந்திரா
* திருகோணமலை ராசரட்ணம்
* காங்கேசன்துறை சகுந்தலா
* அருள்ராஜ்
* யோகராஜ்
* பஞ்சலிங்கம்
* பெஞ்சமின் இம்மானுவல்

**கிறெகரி இணைந்து பாடிய பிரபல பாடகர்கள்**

* ஈழத்து ரமணியம்மாள்
* கனகாம்மாள் சதாசிவம்
* கதிர் சுந்தரலிங்கம்
* ஸ்ரனி சிவானந்தன்
* ஈழத்து சௌந்தர்ராஜன், பொன்னம்பலம்
* ஈழத்து கோவிந்தராஜன், நாகர் கோவில் விஜயரட்ணம்
* அமுதன் அண்ணாமலை
* கோண்டாவில் துரை



படிப்பகம்

www.padippakam.com

## பரிசுகளும் பட்டங்களும்

* கிழக்கிலங்கையில் நடைபெற்ற மெல்லிசைப் போட்டியில் சிறந்த பாடகனாக தெரிவுசெய்யப்பட்டு முதல் பரிசை திருகோணமலை எம்.பி.நேமிநாதன் அவர்கள் வழங்கியது.

* கலைஅரசு சொர்ணலிங்கம் அய்யா அவர்களால் சிறந்த நடிகன் என்ற நற்சான்றிதழ்.

* பாரிஸ் தமிழ் கலைஞர் ஒன்றியத்தால் "நடிப்பிசைக் காவலர்" என்ற பட்டம்

* வசந்தம் திரையரங்கில் சங்கமம் வெளியீட்டு விழாவில் "கலைச்சுடர்" என்ற பட்டம். எம்.ஜி.எஸ். குலேந்திரனால் வழங்கப்பட்டது.

* குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் நாடகப் போட்டியில் மயானகாண்டம் சிறந்த நாடகமாக பரிசு பெற்றது.

, கலைஞர்கள் அவர்கள் வாழும் போதே கௌரவிக்கப்படவேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் கிறெகிரி அவர்களின் "கலைக்கோயில்" தாபனத்தால் கௌரவிக்கப்பட்ட கலைஞர்கள்.

* சங்கமம் வீடியோ பத்திரிகை வெளியீட்டு விழாவில் பிரபல கலைஞர் திருச்செல்வம் சாம்சன் அவர்கட்கு தங்கப்பதக்கமும் "கலைச்சிற்பி" என்ற பட்டமும் பிரபல திரைப்பட, நாடகநடிகர் ரகுநாதன் அவர்களைக் கொண்டு வழங்கிக் கௌரவித்தது.

* பெஞ்சமின் இமானுவல் அவர்கட்கு ரகுநாதன் மூலமாக கலைச்சந்திரன் என்ற பட்டமும் தங்கப் பதக்கமும் வழங்கி கௌரவித்தது.

* எட்டாவது இனிக்கும் இரவினிலே நிகழ்சியில் வைத்து பிரியாலயம் துரைஸ், ரி.தயாநிதி, திரு. றெமிசியஸ் ஆகிய கலைஞர்கட்கு பொன்னாடை போர்த்தி தங்கப் பதக்கம் வழங்கி கௌரவித்தமை.

(கலைக்கோவிலுக்காக இந்தத் தங்கப் பதக்கங்களை வழங்கியவர்கள்:கோல்வ் நகை மாளிகை, கொங்கூட் மொழி பெயர்ப்பு ஸ்தாபனம், அகிலன் வீடியோ ஸ்தாபனம். )



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



**06. 01. 2000**

# மரணம்
# வாழ்வின்
# முடிவல்ல...

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பிற்சேர்க்கை

இது 'கலைப்பாதையில் இவர்' என்ற இந்த நூலின் முதல் பாகத்தில் முற்றுப்பெற்றதில் இருந்து கிறெகரியின் வாழ்க்கை முற்றுப்பெற்றதுவரை உள்ள சேர்க்கை.

அமரராகிவிட்ட 'நடிப்பிசைக்காவலர்' கிறெகரி தங்கராசா அவர்களின் கலைப்படைப்புக்களை போற்றுவதற்கோ! விமர்சனம் செய்வதற்கோ! எனக்கு அனுபவம் போதாது. அவரையும், அவரின் கலைத்திறனையும் வாழ்த்துவதற்கு வயது வேண்டும். விமர்சனம் செய்வதற்கு அனுபவமும் திறமையும் வேண்டும். கிறெகரியின் அனுபவத்திற்கும், திறமைக்கும், முன்னால் நான் ஒரு தொட்டில் குழந்தைதான். இருந்தாலும் திறமைசாலியை, திறமைசாலி, என்று சொல்லாமல் மறைப்பதும் குற்றமாகிவிடும். அந்தவகையிலே கலைத்துறையில் 'வெள்ளிவிழா' கண்ட இந்த 'கலைச்சுடர்' தனது வெள்ளிவிழாவிற்கு பிற்பாடு படைத்த படைப்புகளை இந் நூலில் பிற்சேர்க்கையாகச் சேர்த்து அவரின் திறமைகளை வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளேன்.

கலைத்துறையில் 'வெள்ளிவிழா' கண்டு, வாழ்க்கையிலே பொன்விழா, காணப்போகும் நேரத்தில் இவருடையமறைவு அவருடைய கலைப்பயணத்தொடருக்கு ஏற்பட்ட முற்றுப்புள்ளி! அனைத்து தரப்பினர்க்கும் ஈடுசெய்யமுடியாத இழப்பே.

இவரின் 'வெள்ளிவிழா' விற்குப் பின்னாலான இவரின் கலைப்பயணம் பதிவு செய்யப்படாவிட்டால் இந்த நூலின் முதற்பதிப்பிற்கே அர்த்தமில்லாமல் போய்விடும்.

ஆதலால் இந்த இரண்டாம்பதிப்பில் வெள்ளிவிழாவிற்குப்பின் தனது இறுதிக்காலம்வரை ஆற்றிய கலைப்பயணமும், முதற்பதிப்பில் தவறுதலாக விடப்பட்ட குறிப்புகளும், இணைக்கப்பட்டு இந்நூலுக்கு புதிய மெருகூட்டப்பட்டுள்ளது.

அமரர் கிறெகரி தங்கராசா அவர்கள் தனது சிறுவயதிலேயே கலைமேல் காதல் கொண்டு அலைந்தாலும் அதனை முழுமையாக செயற்படுத்திய



படிப்பகம்

www.padippakam.com

காலம் 65ம், 66ம், ஆண்டுகள்தான்.

இவருடைய திறமைக்கு உருவங்கள் கொடுக்கவும், களம் அமைக்கவும், உறுதுணையாக, உற்ற நண்பர்களாக, அமைந்தவர்கள் திரு. எம். அரியநாயகம். திரு பெஞ்சமின். இமானுவேல் போன்றவர்கள்.

யாழ்ப்பாணம் ஆசனக்கோயில் மைதானத்தில 65ம் ஆண்டு 'யேசுவின் திருப்பாடல்கள்' அரங்கேற்றப்பட்டபோது அதில் பரியோவானாக கிறெகரி அவர்கள் நடித்திருந்தார். இந்த நாடகத்தை எழுதி இயக்கி, அதில் 'கைப்பாஸ்' என்ற பாத்திரத்தில் திரு. அரியநாயகம் அவர்களும் நடித்திருந்தார். இந்த நாடகம் கிறெகரியை ஆயிரக்கணக்கான மக்களுக்கு அடையாளம் காட்டிவைத்தது மட்டுமல்ல! அரியநாயகம் போன்ற கலைத்தொடர்பாளர்களை நண்பர்களாகவும் சேர்த்துவைத்தது. அதன்பின் திரு. அரியநாயகம், அவர்கள் எழுதிய 'இறைவன் இருக்கின்றான்' 'அவள் ஒரு கதை' 'சாணக்கியன்' 'உயிர்த்தயேசு' 'சிலுவைமரணம்' போன்ற நாடகங்களில் எல்லாம் கிறெகரி முக்கிய பாத்திரங்களில் நடித்திருக்கின்றார். அதேபோன்று கிறெகரி தயாரித்து அவருக்கு புகழ் தேடிக்கொடுத்த 'ஆனந்தக்கண்ணீர்' 'ஊதாரிப்பிள்ளை' போன்ற நாடகங்களில் அரியநாயகமும் நடித்திருக்கின்றார்.

இவரின் இசைத்தாகத்தைத் தீர்க்க 68ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுதான் 'கிறெகரி இசைக்குழு'. இந்த இசைக்குழுவிற்கு இவரே இயக்குனராக இருந்து நூற்றுக்கணக்கான மேடைகளில் பல ஆயிரக்கணக்கான ரசிகர்களை மகிழ்வித்திருக்கின்றார்.

பாரீஸ் வந்தபின்பும்கூட கிறெகரி நடித்த முதல் நாடகம் திரு. அரியநாயகம் அவர்கள் எழுதி, இயக்கிய, 'சொந்தமண்' நாடகமாகும். இந்த நாடகம் 85ம் ஆண்டு வானொலியிலும், 86ம் ஆண்டு மேடையிலுமாக அரங்கேறியது.

இன்று நாங்கள் எல்லோரும்தான் கலைஞர்கள் என்று சொல்லிக்கொள்கின்றோம்! ஒரு மேடையில் ஏறியவுடனேயே கலைஞர்களாகிவிடுகின்றோம்! நாங்கள் கலைஞர்கள் என்றால்? அமரர் கிறெகரி கலைக்கோபுரம். கலைத்துறையில் இவர் கால்பதிக்காத இடம் எது? நாட்டுக்கூத்தில் இருந்து நாட்டுப்பாடல்கள்வரை. சங்கீதப்பாடல்களில்



படிப்பகம்

www.padippakam.com



'வெள்ளையடிக்கப்பட்ட
கல்லறை'
பட பூசையின்போது
முகத்தார் ஜேசுரட்ணம் அவர்கள்
அன்பொழுக ஆசீர்வதிக்கிறார்

பிராங்போட் தமிழ்மன்றத்தின்
கலைவிழா ஒன்றில் தனது நண்பன்
பெஞ்சமின் இமானுவேல் அவர்களுடன்
(மயானகாண்டம்)



22வது வயதில் கிறெகரி தங்கராசா
தனது நண்பன் எம். அரியநாயகம் அவர்களுடன்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

இருந்து துள்ளிசைப்பாடல்கள்வரை, சமூகநாடகம், சரித்திரநாடகம், நகைச்சுவைநாடகம், இப்படி... இப்படியாக. சுருக்கமாகச் சொன்னால் இவரின் 'வெள்ளிவிழா' வாழ்த்தில் நான் குறிப்பிட்டதுபோல...வெற்றிலை ஒருநிறம்! சுண்ணாம்பு ஒருநிறம்! பாக்கோ வேறுநிறம்! இவையெல்லாம் ஒன்றாக சேருகின்றபோது வருகின்றநிறம் சிவப்பு! கிறெகரி அவர்கள் இப்படி பலவற்றை தன்னுள் அடக்கியவராக , ஒரு சிகப்பு நிறமாக கலைத்துறையில் மிளிர்ந்தார் என்பதுதான் நிஜம். இவர் கலைத்துறையில் ஒரு மார்க்கண்டேயர்.

இந்த மார்க்கண்டேயரின் கலைப்பயணத்தில், அருட்தந்தை சவரிமுத்து அடிகளார் பலநாடுகளில், பலமேடைகளில், அரங்கேற்றிய 'பலிக்களம்' நாடகம் 1993ம் ஆண்டு பாரிசிலும் அரங்கேற்றப்பட்டது. நாற்பதுக்கும் மேற்பட்ட கலைஞர்களை ஒருங்கிணைத்து மிகப்பிரம்மாண்டமாக தயாரிக்கப்பட்ட நாடகம் அது. நாடகம் அரங்கேறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக நெஞ்சில் நோய் ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் கிறேகரிஅவர்கள். இவருடைய பாத்திரத்திற்கு வேறு ஒருவரை மாற்றவேண்டிய இக்கட்டான சூழ்நிலை இயக்குனருக்கு. ஆனால் கிறெகரியோ தனக்கிருந்த கலைத்தாகத்தால் தனது நோயை பெரிதென கருதாது தனக்கு வைத்தியம் செய்த பிரதம வைத்தியரிடம் ஒருநாள் லீவுபெற்று வந்து நாடகத்தில் 'பிலாத்து' வேடத்தில் தோன்றி அனைவருடைய பாராட்டுக்களையும் பெற்றுச்சென்றார். கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக 'திருமறைக் கலாமன்றத்தால்' மேடையேற்றபட்டுவரும் இந்த நாடகம் மீண்டும் 1997ல் பிரான்ஸிலும் ஜேர்மனியிலும் மேடையேற்றப்பட்ட போதும் அதே பாத்திரத்தில் நடித்து சிறப்புப் பெற்றிருந்தார். 1994ம் ஆண்டு திருமறைக்கலாமன்றம் மேடையேற்றிய 'களங்கம்' நாடகத்திலும் இவர் முக்கியபாத்திரத்தில் நடித்திருந்தார்.

இப்படி பிரித்து, பிரித்து, கூறுவதைவிட திருமறைக் கலாமன்றத்தின் ஒரு உறுப்பாகவே இருந்து கிறெகரி அவர்கள் பணியாற்றினார் என்று கூறுவதே சிறப்பாக இருக்கும்.

கிறெகரியின் இயக்கத்தில் பல அரங்கங்களைக் கண்டு அவருக்கு புகழ் தேடிக்கொடுத்த நாடகங்களில் ஒன்று 'அபசுரங்கள்'. இந்த நாடகம் ஜேர்மன், முன்ஷர் நகரத்தில்1996ல் மீண்டும் மேடையேற்றப்பட்டது. அதில் இவர் பிச்சைக்கார தந்தையாக நடித்திருந்தார். நாடகத்தின் இறுதிக்காட்சியில்



படிப்பகம்

www.padippakam.com

இவர் இறப்பதாக நடிக்கும்காட்சி! அந்தக்காட்சியில் இவர் நடிக்கும்போது பார்வையாளர்களே கண்ணீர்விட்டு கரகோசம் செய்தகாட்சி மறக்கமுடியாதது.

1994ம் ஆண்டு மாவீரர் தினத்தில் நான் எழுதிய 'ஒளிபிறந்தது' என்னும் நாடகத்தை ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் நடித்து சிறப்புப்பெற்றார்.

1997ல் திருமறைக்கலாமன்றத்தின் 'கலைவண்ணம்' 97ல் அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய 'நீதிதேவன் மயக்கம்' என்னும் நாடகத்தை அரங்கேற்றினார். அதேஆண்டு மார்கழியில் 'விழுதுகள்' மன்றம் நடாத்திய விழாவில் அந்த நாடகம் மீண்டும் மேடையேற்றப்பட்டபோது என்னை கம்பர் என்னும் பாத்திரத்தில் நடிக்கவைத்தார். இவருடைய இயக்கத்தில் அந்த நாடகத்தில் நண்பர் சாம்சனும் நானும் நடித்து ரசிகர்களின் பாராட்டுக்களை பெற்றுக்கொண்டோம்.

1999ம் ஆண்டு ஆவணிமாதம் ஜெர்மன் -பிராங்போட் தமிழ்மன்றத்தின் அழைப்பின்பேரில் சென்று சின்னக்குட்டி தயாநிதியின் 'தேவன்பட்டிக்கிராமம்' என்னும் சமுகநாடகத்தையும், தனக்கு புகழ்சேர்த்துக்கொடுத்த 'அரிச்சந்திரா மயானகாண்டம்' என்னும் சரித்திரநாடகத்தையும் அரங்கேற்றினார். அன்றையதினம் அங்கும் ஒரு சிறப்பு அம்சம் இடம்பெற்றது! அது என்னவென்றால்? 'அரிச்சந்திராமயானகாண்டம்' நாடகத்தின் பிதாமகன் V.V.வைரமுத்து அவர்களின் மகன் சாரங்கன் அவர்களே பக்கவாத்தியம் வாசித்து சிறப்பித்திருந்தார்.

ஒரு நாடகம் பிரதியில் மட்டும் அது சிறப்புப்பெற்றுக்கொள்வதில்லை! அதில் நடிக்கும் பாத்திரங்களின் உணர்ச்சிகள், முகபாவங்கள், வசனஉச்சரிப்புக்கள், ஏற்ற இறக்கங்கள், பாடல்களில் நயனங்கள், இவையெல்லாம் ஒன்றாக முறையாக வரும் போதுதான் அந்த நாடகம் சிறப்புப் பெறுகின்றது. அந்த வகையில் கவிஞர் கிறிஸ்றியன் அவர்கள் எழுதிய 'சங்கிலியன்' நாட்டுக்கூத்து மேடையேற்றப்பட்போது இவரின் குரல்வளமும், இசைநயமும்,ஒன்றாக இணைந்து அந்த நாடகத்திற்கும், இவரிற்கும், கவிஞர் கிறிஸ்றியன் ஆகியோருக்கும் பெரும் புகழைத்தேடிக்கொடுத்தது. இந்தநாடகத்தில் இவருடன் இணைந்து நானும் எனதுமகள் தெய்சியும் நடித்து பெருமைதேடிக்கோண்டோம்.



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

அதேபோன்று 22-06-97ல் மேடையேற்றப்பட்ட கலைஞர் அரியநாயகத்தின் எழுத்து இயக்கத்தில் உருவான 'வீரத்தாய்' நாடகத்திலும் இவர் நடித்து அந்த நாடகத்திற்கு புகழ் சேர்த்துக்கொடுத்தார்.

இசைத்துறையிலும் இவருக்கு நிகர் இவர்தான். 'இளையநிலா' இசைக்குழுவில் சிலவருடங்கள் ஆஸ்த்தான பாடகர் இவர். இறுதிக்காலத்தில் 'சப்தஸ்வரங்கள்' இசைக்குழுவிலும் பாடகராக இருந்தார். T.R.T.யின் தமிழ்ஒளியில் இசையோடு இணைவோம் நிகழ்ச்சியில் இணைந்து பலதடவைகள் ஒளிவிட்டு பிரகாசித்திருக்கின்றார். 'கானக்குயில்97' 'இசைமாருதம்98 போன்ற நிகழ்ச்சிகளில் பங்குபற்றி சிறப்புவிருதுகளையும் பெற்றிருக்கின்றார்.

இவருக்கு கலைமீது இருந்த வெறித்தனமான காதல்மோகத்தை சுருக்கமாக சொல்வதற்கு ஒரு உதாரணம்.
ஜெர்மன் நாட்டில் நடந்த ஒருவிழாவிற்கு கிறெகரி அவர்களை பிரதமவிருந்தினராக அழைத்திருந்தார்கள்.
அங்கு சென்றபின்தான் இவருக்கு தெரியும் அந்த அரங்கில் பாட்டுப்போட்டியும் நடக்கப்போகின்றது என்று. தானும் போட்டியில் பங்குகொள்ளப்போவதாக விழா அமைப்பாளர்களிடம் கூறினார்! அவர்களோ *அண்ணை நீங்கள் பிரதமவிருந்தினர் போட்டியில் கலந்துகொள்வது அழகல்ல* என்ற தங்கள் கருத்தைகூற இவரோ *பிரதமவிருந்தினராக வேறுயாரையாவது வைத்துக்கொள்ளுங்களேன்* என்று கூறினாராம். இதனை ஏன் இங்கு நினைவு படுத்துகின்றேன் என்றால் பிரதமவிருந்தினராக மேடையில் கிடைக்கும் கௌரவத்தைவிட ஒரு கலைஞனாக மேடையில் வருவதையே பெரும் பாக்கியமாக கருதியவர் அமரர் கிறெகரி தங்கராசா அவர்கள். இப்படிஒரு கலைஞன் இனி எப்பொழுது பிறப்பான்?

புலம்பெயர்ந்து பாரீஸ் வந்து தனது கலைத்தாகத்தைத் தீர்க்கத் துடித்திருந்த நேரத்தில்தனது நண்பன் அரியநாயகத்தின் சொந்தமண் நாடகத்தின் மூலம் எப்படி அரங்கத்திற்கு வந்தாரோ! அதேபோன்று கிறெகரி அவர்களின் இறுதிநாடகமும் திரு. அரியநாயகம் அவர்கள் எழுதிய நாடகம்தான்! பாரீஸ் ஆன்மீகப்பணியகம் தயாரித்த ஒளிவிழா 99ல் அரியநாயகம் அவர்கள் எழுதிய 'சவுலே, சவுலே' என்ற நாட்டுக்கூத்தை இவரின் கலைக்கோயில்



படிப்பகம்

www.padippakam.com

சார்பாக தயாரித்து இவரே இயக்கி, பிரதான பாத்திரத்தில் தன்னோடு இணைத்து இலங்கை வானொலிபுகழ் சங்கீதபூஷணம் திரு குலசீலநாதன் அவர்களையும் நடிக்கவைத்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

கடல் வீங்குவதும், விழுவதுமாக இருக்கும். சில சமயங்களில் வெள்ளைமலையென! சிலவேளைகளில் அமைதியான தரையென! ஒருசமயம் சுழிநீர்மடிப்பலை! மற்றொருசமயம் வேகம்! இன்னொருசமயம் சாந்தம்! இவை காலமாற்றத்தால் ஏற்படுபவை. கலைத்துறையில் கிறெகரி தங்கராசாவும் அப்படித்தான்! கிறெகரி அவர்கள் அமைதியாக இருக்கின்றார் என்றால் அதன் அர்த்தம்! அடுத்து புயலாக சீறி ஒரு புதியபடைப்பை அரங்கேற்றப்போகின்றார் என்பதாகும்.

திறமையுடையவர்களை வானளவிற்கு தூக்கிவைத்து புகழாரம் சூட்டுவதிலும்சரி! பொறாமையுடையவர்களை நேருக்குநேர் ஏசுவதிலும்சரி !கிறெகரி அவர்கள் தராசின் முட்கம்பியாகவே நின்றிருக்கின்றார்.

இவருடைய செயல்முறைகள் சிலசமயங்களில் அடுத்தவரை கோபிக்கவைத்ததுமுண்டு. ஆனால் தனது செயல் தவறு என்று மற்றவர்கள் சுட்டிக்காட்டினால் அடுத்தநொடியே ஓடிவந்து கட்டித்தழுவி தனது நேசத்தைக்காட்டுவதற்கும் இவர் தயங்குவதில்லை. இவர்போல் ஒரு மனிதரை நாம் இனி தேடவேண்டும்.

ஆசையில்லாத மனிதர்கள் யார்? கிறெகரியின் நீண்டநாள் ஆசை, சின்னத்திரையிலும் தான் முத்திரை பதிக்கவேண்டும் என்பதுதான்.
அந்த முயற்சியின் முதல் கட்ட நடவடிக்கையாக 'பாசப்பூக்கள்' என்னும் படத்தை ஆரம்பித்து அதன் தொடக்கவிழாவில் ஐயா முகத்தார் யேசுரட்ணம் அவர்களுக்கு மலர்முடி வைத்து பெரும் பாராட்டுவிழாவே நடத்தினார். ஏனோ பாசப்பூக்களை அவரால் தொடரமுடியவில்லை. அதன்பின் 'வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்' என்னும் படத்திற்கு திரு. முகத்தார் யேசுரட்ணம் அவர்களின் வீட்டிலேயே பூசைபோட்டார். பின் படத்தின் முதற்படப்பிடிப்பு இவருக்கும் கலைக்கோயிலுக்கும் வலதுகரமாக விளங்கிய திரு. மனோதாஸ் அவர்களின் இல்லத்தில் மிகச்சிறப்பாக ஆரம்பிக்கப்பட்டது.

கலைத்துறையில் கால்பதித்த இடமெல்லாம் வெற்றிக்கொடி நாட்டிவந்த



படிப்பகம்

www.padippakam.com

அமரர் கிறெகரி அவர்கள் தோற்றுப்போனது இந்த சின்னத்திரைப்படத் தயாரிப்பில்தான்.

இந்த கலைமேகத்திடம் நாம் எதிர்பார்த்தது மழையைத்தான். நிலவு இல்லாவிட்டாலும் வாழலாம் மழையில்லாமல் வாழமுடியுமா? கலைப்பயிர்களுக்கெல்லாம் மழை பொழிந்து கொண்டிருந்த மேகம் தனது மூச்சை நிறுத்திக்கொண்டதால் மழையின்றி பயிர்கள் எல்லாம் வாடுகின்றன.

புலம்பெயர் மண்ணில் அமரர் கிறெகரியை அம்மா என்று அழைத்துக்கொள்ளலாம். ஒரு நடிகனாக, பாடகனாக, படைப்பாளியாக மட்டும் இருந்துவிடாது, ஒழிந்திருந்த பல கலைஞர்களை வெளிச்சத்திற்கு அழைத்து,வந்து அரங்கேற்றி வைத்தார்! எழுதிவைத்துவிட்டு மூலைக்குள் கிடந்த பல எழுத்தாளர்களினது கதைகளையும், கவிதைகளையும், நாடகமாக்கி, பாடலாக்கி, பறைசாற்றி வைத்தவர். இப்படி தனதுதிறமைக்கும் புகழுக்கும் மட்டும் முக்கியத்துவம் கொடாது பல திறமைசாலிகளை உருவாக்கி புகழடையவைத்த கிறெகரி தங்கராசா அவர்களை கலைத்துறையில் அம்மா என்று அழைத்துக்கொள்ளலாம்.

கிறெகரி அவர்கட்கு பல பட்டங்களும், விருதுகளும் தேடிவந்து இவரின் பெயரை அலங்கரித்திருக்கலாம்! ஆனால் இவரைப்பொறுத்த அளவிலும்சரி இவரின் திறமைகளை பொறுத்த அளவிலும்சரி இவருக்கு இவையெல்லாம் மிக,மிக, சாதாரணமானவையே! இவரால் ஏனைய கலைஞர்களுக்கு கொடுக்கப்பட்ட விருதுகளும், பதக்கங்களுமே ஏராளம்! சிம்மாசனத்திற்கே தகுதியுடைய கிறெகரி அவர்கட்கு கிடைத்த பட்டங்கள் எல்லாம் சின்ன நாற்காலிகளைப்போன்றவையே.

காலத்தின் சோதனையில் சிக்குண்டு சில சமயங்களில் வேதனையில் சிக்குண்ட காலங்களிலும்கூட கிறெகரி கலையை மறந்ததில்லை. அவருடைய உணர்வுகள், ஏன்? உயிர்மூச்சுக்கூட, கலையுடனேயே கலந்திருந்தது. இன்று கல்லறைக்குள் மௌனத்தவம் செய்துகொண்டிருக்கும் கிறெகரியின் மனதில் விதைக்கப்பட்ட பல ஆசைகள் நிறைவேறாது அவரோடு புதைக்கப்பட்டிருக்கின்றது. அவைகள் 'வெள்ளையடிக்கப்படாத கல்லறைகளாகவே' அமைந்துவிட்டன.



படிப்பகம்

www.padippakam.com

இவரிடம் உள்ள சிறப்புஅம்சம் ஒரு நாடகத்தை அரங்கேற்றுவதற்குமுன்னர் அதன் கதையை எமக்கு விபரிப்பாரேயானால்! அவர் கதைசொல்லும் விதம் நாம் நாடகத்தை நேரில் பார்த்தது போன்றே இருக்கும். தொலைபேசி எடுத்து சில கவிதைவரிகளை படித்துக்காட்டுவார். பின்பு அக்கவிதைக்கு இசைபோட்டு பாடியும்காட்டுவார். இன்று இவரது மறைவால் அந்த தொலைபேசியும் அழுதுகொண்டிருக்கும்! ஏனென்றால் இவர் தனது குடும்பத்தாருடன் உரையாடிய நேரங்களைவிட கூடுதலாக அந்த தொலைபேசியுடன்தான் அதிகநேரங்களை செலவு செய்திருக்கின்றார்.

நண்பர் கிறெகரி அவர்கள் தான் தீர்க்காமல் போன ஆசைகளுடன் எனக்கும் தீர்த்துவைக்காமல் போன ஆசையும் ஒன்று உண்டு! எனக்கு நடிப்புத்துறையில் ஆர்வம் ஏற்படக்காரணமாக இருந்தவரும் சிறந்த எழுத்தாளருமான 'கலாபூஷணம்' நவாலியூர். நா. செல்லத்துரைமாஸ்ற்ரர் அவர்கள் அண்மையில் என்னோடு தொடர்பு கொண்ட கடிதத்தில் புலம்பெயர்ந்த மண்ணில் எங்கள் கலைச்சேவைக்கு வாழ்த்துக்கள் கூறியதோடு தற்போது தான் எழுதியுள்ள 'சின்னவனா?பெரியவனா?' என்னும் நாட்டுக்கூத்தை நூலாக்கிக்கொண்டிருக்கின்றேன் அந்தக்கூத்தை நீங்கள் ஐரோப்பிய மண்ணில் மேடையேற்ற முயற்சிக்கவேண்டும் என்று கேட்டிருந்தார். அதற்கு நான் எழுதிய பதிலில் எம்மோடு கிறெகரி தங்கராசா என்னும் சிறந்த கலைஞர் இருக்கின்றார் கண்டிப்பாக அவர்மூலமாக தங்களின் கூத்தை அரங்கேற்றுவோம் என்று சொல்லியிருந்தேன். நண்பன் கிறெகரியுடனும் இதுபற்றி உரையாடினேன். அதற்கு அவர் *மச்சான் கெதியா அந்த புத்தகத்தை எடுப்பி நான் அந்தமாதிரி மேடையேற்றுறன்* என்று உறுதிமொழியை தந்திருந்தார். இன்னும் சிலநாட்களில் அந்தபுத்தகம் எனது கைக்கு கிடைத்துவிடும். இருந்தும் என்ன பிரயோசனம்? நாட்டுக்கூத்தை கலைநயத்தோடு படைக்க கிறெகரியை விட்டால் இங்கு யாருண்டு?

கல்லறைக்குள் தூங்கும் நண்பன் கிறெகரியைப்போல எனது புத்தக அலுமாரிக்குள் தூங்கவேண்டிய புத்தகமாக இந்த 'சின்னவனா? பெரியவனா?' புத்தகமும்?.

வருடத்தில் வரலாற்றுக்களை பதியவைக்கும் நாட்கள் பல உண்டு! ஒரு வரலாற்றை இடைநிறுத்திய நாள் 06- 01- 2000. ஆனாலும் கிறெகரி அவர்கள் ஒரு நூற்றாண்டில் பிறந்து அடுத்த நூற்றாண்டினில் மறைந்து



படிப்பகம்

www.padippakam.com

இரண்டு நூற்றாண்டுகளின் வரலாறுகளிலும் பதியப்பட்டுவிட்டார்.

நண்பனே! நீர் அமராகியபின் உமது கலைத்துறை 'வெள்ளிவிழா' நிகழ்ச்சிகளை நினைத்துப்பார்க்கின்றேன். அந்தவிழாவில் உம்மைப்பற்றிய கலைஞர்களின் கருத்துக்களையும், உமது கலைப்பதிவுகளையும் ஒளிநாடாவில் தொகுத்து திரையிட்டுக்காட்டினீர். அதனை தொகுக்கும் பணியிலும் என்னை இணையவைத்து எனது பெயரையும் அதில் பதியவைத்துக்கொண்டீரே. அன்று கலையரசர் மண்டபமே நிறைந்து வழிந்த மக்கள்கூட்டம் உம்மை வாழ்த்திச்சென்ற காட்சி இன்றும் எனது கண்ணுக்குள் நிலைத்து நிற்கின்றது.

அந்தக் காட்சியை நீர்த்துளிகள் வந்து மறைக்கின்றது! ஏன்? உமது இறுதிக்கிரிகையிலும் அந்த மக்கள் எல்லாம் வந்து உமது பூதஉடலுக்கு அஞ்சலி செய்ததை நினைக்கும்போது.

கொய்யாத்தோட்டத்தின் மணம் பரப்பும் மணந்த எங்கள் கொய்யாப்பழமே! உமது வரலாற்றை பதியவைத்ததால் என்னை இலங்கைக்கு பாலம் போடுவதற்கு இராமருக்கு உதவிய அணிலாக நானே எண்ணிக்கொள்கின்றேன்.

இதனை ஒரு சேவையாக மனதில் கொண்டு மறுபதிப்பும் செய்ய முன்வந்த ரஜனி பதிப்பகத்தினர்க்கும் திரு. குகநாதன் அவர்கட்கும் இந்நூலை விரைவாக, அழகாக பதிப்பித்துத்தந்த கிருஸ்ணா அச்சகத்தினர்க்கும். மற்றும் கிறெகரி அவர்கள் மீதுகொண்ட அன்பால் இதனை கணனிமூலம் தட்டச்சு பதிப்புச்செய்துதவிய நண்பர்களுக்கும் எனது இதயம்நிறைந்த நன்றிகள்.

அன்பன்
**வண்ணை தெய்வம்**



படிப்பகம்

www.padippakam.com

அமரர். கிறெகரி தங்கராசா அவர்கள் தான் எங்கு நாடகங்கள மேடையேற்றினாலும், நிகழ்ச்சித்தயாரிப்பாளர்களின் விளம்பரத்தை விட தானும் ஒரு விளம்பரத்தை தனது செலவில் தயாரித்தே விடுவார். ஊதியம் எதுவும் இல்லாமல் கலைக்காகச்சேவைசெய்யும் தனது கலைஞர்களை குறைந்தளவேனும் கௌரவிக்கவேண்டும் என்ற விருப்பம் அவருடையது.


கடைசியாக, அவர் பாரிஸில் மேடைற்றேிய நாடகத்திற்கு (ஒளி விழா) விளம்பரம் செய்வதற்காக தானே தனது கைப்பட தயாரித்து அச்சகத்திற்கு கொடுத்த ஓர் பிரதி அருகே தரப்பட்டடுள்ளது.

கிறெகரி அவர்களிடம் எழுதக்கூடிய ஆற்றலும் இருந்தது என்பதற்கு சாட்சியாக 1996ம் ஆண்டு நினைவழியாக்கோலங்கள் என தனது கடந்தகால கலைவாழ்வின் சில பக்கங்களை பதிவாக்கி திருமறைக்கலாமன்றத்தின் கலைமுகம் இலக்கிய இதழில் எழுதியுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com



"விழுது 2000"

கவிவிழா 4

இனிய இரசிகப் பெருமக்களே,

வழங்கும்

"கிறிஸ்மஸ் ஒளிவிழா 99"

வழங்குபவர்

சிலுவே... சிலுவே!!

கவிஞர்கள்:— ஆ. கிறகெரி தங்கராஜா,

இசை:—

வயலின் — ஜே. தேவராஜா.

இயக்கம்.

"நடுத்தீர்ப்பினைக் காவலர்"

ஆ. கிறகெரி தங்கராஜா.

விழா மண்டபம்:- 50 Rue de TORCY, 75018, PARIS.
M°, MARX DORMOY.

காலம்:- 26.12.99. ஞாயிறு, பி.பகல் 4 மணி

அமரர். கிறெகரி அவர்களின் நேர்த்தியான சில செயல்பாடுகளுக்கு ஆதாரமாக அவர் தனது கைப்பட எழுதி தயாரித்து அச்சகத்திற்கு கொடுத்த ஓர் பிரதி



படிப்பகம்

www.padippakam.com

# நினைவழியாக் கோலங்கள் . . .

– கிறெகரி தங்கராசா

1970ம் ஆண்டு சித்திரைமாதம் மாலை 7மணி. யாழ். ஆசனக்கோயில் மைதானத்தில் இயேசுநாதரின் திருப்பாடுகளை மேடையேற்றுவதற்கான இறுதிநாள் ஒத்திகை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அன்றைய பங்குக்குரவர் வணபிதா.ஜோய் அவர்களின் தலைமையின் கீழ் நூற்றுக்கணக்கான கலைஞர்கள் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறோம். இயேசுநாதரை சிலுவையில் அறைந்து கொல்லும் காட்சி 30 அடி உயரமான சிலுவையில் பல பக்கங்களிலும் பலம்வாய்ந்த கயிறுகள் பிணைக்கப்பட்டிருக்கிறது. சிலுவையில் கலைஞர் இமானுவேல் அருகே 30அடி உயரத்தில் அரண்மனை, அதில் பிலாத்துவாக நான் கொலுவிருக்கிறேன். வணபிதா இன்னும் சில முக்கியஸ்தர்களுடன் தூரத்தே நின்று ரசித்துக்கொண்டிருக்கிறார்.

ஜேசுநாதரைத் தாங்கிய சிலுவை பல நடிகர்களின் உதவியுடன் கயிறுகள் மூலம் மேலே இழுக்கப்படுகிறது. அனைவரும் அண்ணாந்து பார்க்கும்படி நிக்க சிலுவையின் அடிப்பாகம் குழிக்குள் இறங்காது சிலுவை நிமிர்ந்துவிட்டது. குழிக்குள் இறங்கிவிட எண்ணிய ஒரு உதவிளாளர் கயிற்றைப்பிடித்து இழுத்துவிட்டார்.
ஐயோ!
வணபிதா உட்பட மைதானத்தில் நின்ற அனைவரும் ஒருமித்து கதறினார்கள். சிலுவையுடன் பிணைக்கப்பட்டிருந்த இமானுவேல் பெரிய சத்தத்துடன் மேடையில் குப்புற விழுந்தார். மேடை பரபரத்தது. எல்லோரும் கதறினோம். மேடை உடைந்து கலைஞர்கள் பலர் கீழே கிடந்தார்கள்.வீரனாக நடித்துக்கொண்டிருந்த எனது சகோதரன் காதில் இரத்தம் வழிய வழிய இழுத்து எடுக்கப்பட்டான். இப்படியே மற்ற நடிகர்களும் சிறுசிறு காயங்களுடன்..... அதிசயம்! எல்லோரும் பதறியபடி தேடிய கலைஞன் இம்மானுவேல் காயங்கள் எதுவுமின்றி தூக்கியெடுக்கப்பட்டார். யேசுநாதர் தப்பிவிட்டார்.! யேசுநாதர் தப்பிவிட்டார் என மகிழ்ச்சியில் குரல் எழுப்பினார். வணபிதா எல்லோரும் மகிழ்ச்சில் திளைத்தோம்.

மறுநாள் 60அடி நீள மேடையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வெள்ளத்தின் முன் யேசுநாதரின் திருப்பாடுகள் மேடையேறியது.



படிப்பகம்

www.padippakam.com

எமது கலைக்குரு சவரிமுத்து அடிகளார், தனது படைப்புக்கேற்ற நடிகர்களை தேர்வுசெய்து நடிக்கவைப்பதில் முதன்மையானவர். நாடக ஒத்திகைக்கு நேரத்திற்கு சமூகம் கொடுத்தல், கொடுத்த வசனத்தை மனப்பாடம் செய்தல், நாடக ஒத்திகையின்போது வீண்கதைகளை தவிர்த்தல் இப்படி பல கட்டுப்பாடுகளை விதித்து செயல்படுத்துபவர். ஒழுங்கு மீறுபவர்களை யாரென்றும் பார்க்காமல் தண்டிக்கவும் தயங்கமாட்டார். அனேகமாக நடிகர்களின் முகத்தில் இருந்து இரத்தம் கசிந்ததாக கேள்விப்பட்டிருக்கிறேன். பார்த்ததில்லை. அன்று மாலை 4மணி. ''வா மகனே வா'' நாடக ஒத்திகை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நாடகத்தின் முக்கிய பாத்திரம் இளையமகன் ஊதாரிப்பிள்ளையாக நான். பயிற்சி மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை நான் பின்னணிப்பாடகிகள், பிற நடிகர்களுடன் வம்பளந்துகொண்டிருந்தேன். இதை சவரிமுத்து அடிகளார் கவனித்துக்கொண்டிருக்கிறார் என்பதை நான் தெரிந்துகொள்ளவில்லை. கிறஹெரி! அடுத்து உன்னுடைய கட்டம். தடித்த குரலில் சத்தம் வந்தது. திடுக்கிட்டேன். என்னுடைய வசனத்தைபேசி நடிக்கச்சொன்னார். நான் தடுமாறினேன். மின்னல் வேகத்தில் அவருடைய கைகள் என்னுடைய முகத்தை பதம்பார்த்தன. வாயிலிருந்து இரத்தம் கசிந்தது. நிலை தவறினேன். நடிகர்கள், பாடகர்கள், இசையமைப்பாளர்கள், ஜேசுதாசன் உட்பட அனைவரும் பேயறைந்தது போல் திகைத்து நின்றனர். பிதாவோ, நடியடா, நடி என்றார். அவமானம் ஒருபுறம் வந்த அழுகையையும் மீறி நடித்தேன். எப்படித்தான் நடித்தேனோ....! வசனம் மடை திறந்தாற்போல் வந்துகொண்டிருந்தது. பிதா சவரிமுத்து அடிகளார், திகைத்த கலைஞர்கள் ஆச்சரியத்துடன் என்னைப்பார்த்தனர். கெட்டவனான நான் மனம்திருந்தும் காட்சி அழுதேன், அழுதேன் பாத்திரத்தோடு ஒன்றிணைந்து அழுதேனோ! அல்லது அடி வாங்கிய அவமானத்தால் அழுதேனோ தெரியாது. அழுதுகொண்டே இருந்தேன். திடீரென இரண்டு கைகள் வந்து என்னை கட்டித்தழுவின. வேறுயாருமல்ல எமது கலைக்குரு சவரிமுத்து அடிகள்தான். எனக்கு அழுகை இன்னும் பீறிட்டது. அவருடைய கண்டிப்பும் கட்டியணைப்பும் இப்போதும் என்னை சிலிர்க்க வைக்கின்றன. உற்சாகமடைய வைக்கின்றன.

1971ம் ஆண்டு திகதி நினைவில்லை. யாழ். திருமறைக்கலாமன்றம் முதற்தடவையாக கடல் கடந்து மேடையேறியது. இருபதுக்கு மேற்பட்ட நாடகக் கலைஞர்களுடன் முதன் முதலாக இந்தியாவுக்கு பயணமான நாடகக்குழு என்ற பெருமையையும் திருமறைக்கலாமன்றம் பெற்றுக்கொண்டது.

பல பிரச்சனைகளால் எதிர்பார்த்தபடி சென்னையில் மேடையேற்ற



படிப்பகம்

www.padippakam.com

முடியவில்லை. திருச்சியில் மேடையேறிய அன்றும் நிலமை சீராக இல்லை. மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் தி.மு.க விலிருந்து பிரிந்து அ.தி.மு.க திண்டுக்கல் தொகுதியில் தனது முதல் வேட்பாளரை நிறுத்தி பெருந்தொகையான வாக்குவித்தியாசத்தில் ஜெயிக்கிறார். இதனால் திருச்சி நகரமே அல்லோலகல்லோலப்படுகின்றது. இருந்தும் தேவர் அரங்கில் எமது நாடகம் மேடையேறுகிறது. நாடகத்தில் ஒரு கட்டம் யேசுநாதரை சிலுவையில் ஏற்றிக் கொலை செய்த குற்றவாளிகளை வழக்கறிஞர் இருவர் துருவித் துருவி கேள்விமேல் கேள்விகள் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். கைப்பாஸ் அன்னாஸ்,பிலாத்து ஒவ்வொருவரும் ஆளையாள் மாறி ஒருவர்மீது ஒருவர் குற்றம் சாட்டிக்கொண்டிருந்தனர். இந்த நேரம் நீதிபதி நீங்கள் குற்றவாளிகள் இல்லை. அப்போ ஜேசுவை கொன்றது யார்? கொன்றது யார்? என்று உரத்து கேள்வியெழுப்ப பார்வையாளர் மத்தியில் இருந்து மதியூகிகளே! நான் கூறுகிறேன். என்றபடி எழுந்து வரவேண்டும். அப்போது தான் அந்த வில்லங்கமும் வந்தது.

நீதியரசராக இருந்த பிரான்ஸ் ஜெனம் தனது வசனத்தைக் கூற, நாலுமுழ வேட்டியுடனும் வெள்ளை அரைக்கைசேட்டுடனும் பார்வையாளர் மத்தியிலிருந்து நடிகர் ஜெயசிங்கம் மதியூகிகளே! நான் கூறுகிறேன்! நான் கூறுகிறேன்! என்று உணர்ச்சிவசப்பட்டவராய் கத்த பார்வையாளர்களோ ஜெயசிங்கம் நாடகத்தை குழப்புகிறார் என எண்ணி அவரை பலாத்காரமாய் பிடித்து இழுத்து இருத்த முயன்றுகொண்டிருந்தனர். அவரோ மதியூகிகளே! நான் கூறுகிறேன்.! நான் கூறுகிறேன். என்றபடி திமிறுகிறார். நாடகம் நகரவில்லை. நாடகம் குழம்பிவிடுமோ என்ற பயம் மேடையில் நின்ற எங்களுக்கு, ஒருவாறு சவரிமுத்து அடிகள் ஓடிச்சென்று அவர்கள் பாஷையில் விளங்கப்படுத்தி ஜெயசிங்கத்தை விடுவித்தார். தப்பினேன் பிழைத்தேன் என ஓடிவந்து மேடையேறிய ஜெயசிங்கம் ஆம்! நாங்கள் தான் குற்றவாளிகள் என்று வசனத்தை தொடர்ந்தார். சபையில் பலத்த கரகோசம். களங்கம் சிறப்பாக மேடையேறி மீண்டது.

யாழ்ப்பாணத்தில் எத்தனையோ தடவைகள் இயேசுநாதரின் திருப்பாடுகளின் காட்சி மேடையேற்றப்பட்டாலும் 1971ம் ஆண்டு மேடையேறவிருந்த பலிக்களம் காண வடஇலங்கை முழுவதிலிருந்துமே ரசிகர்கள் தயாராகிக்கொண்டிருந்தனர். காரணம் 200ற்கும் மேற்பட்ட கலைஞர்களின் பங்கேற்போடு இலங்கை சரித்திரத்திலேயே இவ்வாறான மேடை எந்த நாடகத்திற்கும் தயாரிக்கப்படவில்லை என்பதும் தான். யாழ்.விளையாட்டரங்கில் இம் மேடை தயாரிக்கப்படுவதற்காக கொழும்பிலிருந்து பாராக்கிரம என்ற பிரபல மேடை, ஒளி அமைப்பாளர்கள் வரவழைக்கப்பட்டிருந்தனர். யாழ்.கோட்டையில் திருமறைக்கலாமன்றம்



படிப்பகம்

www.padippakam.com

சாதனை படைக்க இருக்கிறது என மன்றத்தின் ஒவ்வோரு கலைஞனும் பெருமையும், பூரிப்பும் நிறைந்தவனாகவே காணப்பட்டார். முதன்முதலாக யாழ். கோட்டையில் நாடகம் மேடையேற்றியதும், முதன் முதல் யாழ்ப்பாணத்திற்கு கொழும்பிலிருந்து மேடை அமைப்பாளர்களை அழைத்ததும் கூட யாழ். திருமறைக்கலாமன்றம்தான்.

சுமார் 2 மணியளவில் யாழ்.கோட்டை பலிக்கள நாடகத்திற்கான பிலாத்து அரண்மனை, கைப்பாஸ், அன்னாஸ் மாளிகை, யேசுநாதரை சிலுவையில் அறைவதற்காக கோட்டை தூக்குமேடை மாற்றி மலையாக்கப்படுகிறது. இப்படியான பலவிதமான காட்சியமைப்புக்கள் உருவாக்கப்பட்டுவிட்டது. நேரம் 2:15 இருக்கும். இரண்டு வெள்ளைநிற நீளமான வான்கள் கோட்டைவாயிலில் வந்து நின்றன. பஸ்ஸிலிருந்து இறங்கிய அனைவரும் இளம்புத்தபிக்குகள் அப்படித்தான் உடை அணிந்திருந்தனர். எமது நிகழ்ச்சி பற்றிய தகவல்களை அறிந்தபின் போய்விட்டனர்.

சுமார் ஆறுமணிக்கே கோட்டை மைதானம் நிறையைத் தொடங்கிவிட்டது. 6:45மணிக்கு யாழ்.சுப்பிரமணியம் பூங்கா யாழ்.மாநகரசபை முன்வீதி, றீகல் படமாளிகை முன்மைதானம் எங்கும் ஜனத்திரள். மாலை 7:00மணி பராக்கிரம ஒளியமைப்பாளரின் இராட்சத மின்விளக்குகள் மேடையை நோக்கி ஒளியை கக்குகின்றன. இயக்குனர் வணபிதா சவரிமுத்து அடிகளாரின் வெண்கலக்குரல் கோட்டைமைதானம் எங்கும் ஒலிக்கிறது. பலிக்களத்தில் ஒவ்வோருகாட்சியும் விறுவிறுப்பாகத் தொடர்கிறது. காட்சிகளுக்கிடையில் இடைவெளியே இல்லாதபடி தயாரிப்புக்கள். கடைசிக்காட்சி யேசுநாதர் சிலுவையில் அறைந்து கொல்லப்படுகிறார். பார்வையாளர் மனம் உருகுகிறது. இன்னொருபுறம் ஜேசுநாதர் உயிர்த்தெழும் காட்சி, யேசுநாதர் உயிர்தெழுந்தார். 3 மணிநேரம் கட்டிப்போட்டதுபோல் ரசித்துக்கொண்டிருந்த பார்வையாளர்கள் மெதுவாக தம்மை விடுவித்துக்கொண்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தனர்.

நாங்கள் ஒப்பனைளை களைந்துவிட்டு இரவுச்சாப்பாட்டையும் முடித்து தண்ணீர் தொட்டியை நோக்கி சென்றுகொண்டிருந்த வேளை பயங்கர ஒலியுடன் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன. யாழ்.பொலீஸ் நிலையத்தை நோக்கி வேட்டுக்கள் பறந்தன. எமக்கு ஒன்றும் புரியவில்லை. மேடையை நோக்கி ஓடினோம். பெண் நடிகைகள் மற்றைய கலைஞர்கள் ஓவென்று கதறுகிறார்கள். அடிகளார் உட்பட எல்லோரும் என்ன நடக்கிறது என்று தெரியாமல் மலைத்து நின்றோம். யாழ். பொலீஸ் நிலையத்தில் இருந்து அபாய மணி ஒலித்தது. விடுதியில் இருந்த பொலீசாரின் மனைவிமார் மகே அம்மே என்று கூக்குரலிட்டபடி தங்கள் குழந்தைகளையும் தூக்கிக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டு திசைதெரியாது ஓடினர். எங்கும் புகைமண்டலம். புகைமண்டலத்திற்கு நடுவே பொலிஸாரை விட வேறுபலரும் சுட்டுக்கொண்டு ஓடுகிறார்கள். சிலர் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகிறார்கள். அந்நாளில், யாழ்.முற்றவெளி தினகரன் விளையாட்டின் போது புகழ்மிக்க தம்பரின் வானவேடிக்கைகளை தான் கண்டிருக்கிறது. ஆனால் அதே மைதானத்தில் இன்று இப்படி. வெடிச்சத்தங்கள் காதைப் பிளந்ததோடு இரத்தத்தையும் உறையவைத்தன. நாடகத்துணிகளால் எங்களை மூடியபடி எல்லோரும் குப்புற படுத்துவிட்டோம். எங்கும் ஒரே இருள். பல ஆயிரம் ரூபாய் செலவில் வரவழைக்கப்பட்டிருந்த பராக்கிரம இராட்சத ஒளி விளக்குகள் இருந்தும் பயன்படுத்த முடியவில்லை. பெண் கலைஞர்களின் அழுகுரல்கள், எம்மால் எதுவும் செய்யமுடியவில்லை. வெளிக்காட்டாதபடி எங்களுடைய பயத்தையும் அடக்கிக் கொண்டு முழுசியபடி படுத்திருந்தோம். ஒரு உருவம் போர்த்திய படி ஊர்ந்து ஊர்ந்து வருகிறது. எமக்கு நடுக்கம் அதிகமாகிறது. ஏய் ஆற்றா அது? என்றோம். தம்பிமாரே அருக்காவது ஏதாவது நடந்ததா? என்றபடி உருவம் எம்மை நோக்கி வந்தது. அது வேறுயாருமல்ல எமது ஆன்புத்தந்தை சவரிமுத்து அடிகள் தான். அந்த நேரத்திலும் கலைஞர்கள் மேல் அக்கறை கொண்டு தடவித் தடவி எம்மைத் தேடிவந்த தந்தையின் பரிவையும் பொறுப்பையும் என்னவென்று உரைப்பது. கண்கள் கலங்கின.

அதிகாலை 4 மணியளவில் சண்டை ஓய்ந்தது. ஆங்காங்கே பல சடலங்கள் கிடந்தன. யாழ். ஆயரும் அவ்விடத்திற்கு வந்துவிட்டார். ஆயர் பொலீஸ்மா அதிபர் சுந்தரலிங்கத்துடன் கதைத்தபின், சவரிமுத்து அடிகளார் எம்மை ஆயத்தமாகச் சொன்னார். எமக்காக வரவழைக்கப்பட்டிருந்த வானில் நாம் வீடு நோக்கிப் புறப்படத்தயாரானோம். பொலிஸ்மா அதிபர், அடிகளாரின் கையைப்பிடித்து பலிக்களம் நாடகத்தால் நாம் பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கிறோம். உங்கள் இராட்சத விளக்கங்கள்தான் எதிரிகளை அழிப்பதற்கு எமக்கு உதவின என்று நன்றி பாராட்டிக்கொண்டிருந்தார். எப்படியோ அந்த சேகுவரா புரட்சியாளர்களும் எமது கலை வரலாற்றில் அழிக்கமுடியாத பதிவாகிவிட்டனர்.

*(கலைமுகம் கலை இலக்கியஇதழ்*
*1996 பாரிஸ் சிறப்பிதழ்)*



படிப்பகம்

www.padippakam.com



இது என் நண்பனின் கதை.
ஒரு கலைஞனின் கதை.
ஒரு மனிதனின் கதை.

இந்தப் புத்தகத்தில் வரும் பக்கங்கள் எல்லாம் கலாநயத்தோடு உலாவரும் உண்மைக்கலைஞனின் கதை.

மூன்றுதலைமுறைகளுக்கு ஒருமுறைதான் திறமையான கலைஞன் உருவாகின்றான் என்று பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அது எந்தஅளவிற்கு உண்மையோ எனக்குத் தெரியாது. ஆனால் மூன்று தலைமுறைகளைக் கண்டுவிட்ட ஒரு கலைஞனின் கதையை எழுதியதில் எனக்கு மகிழ்ச்சி. என் மனதில் ஒரு திருப்தி.

நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களை நடித்துமுடித்து, பாடல் நடிப்பு என ஆயிரக்கணக்கான மேடைகளில் இலங்கையின் பல பாகங்களிலும் தோன்றியதோடுமட்டுமல்ல, அருட்தந்தை நீ. மரியசேவியர் அடிகள், பூந்தான்ஜோசேப் போன்ற பெருங்கலை களோடும் இணைந்தும் பணியாற் ிய ஓர் கலைஞன். ந்த வெள்ளிவிழா யகனின் லைவாழ்வு பல்லாய ம் மல்களைக்கடந்து ரோப்பியமண்ணிலும் தாடர்ந்திருப்பது சிற புத்தான். பல ரோப்பிய மேடைகள கிறெகரியின் ரல் ஒலித்திருக்கிற .

ப்பேர்ப்பட்ட ஒரு சி ந்தகலைஞனின் ாழ்க்கையில் மறைந் கிடந்த கழ்வுகளை நூலாக உருவாக்கும் பணி னக்கு கிடைத்ததில் நான் பெரும் கிழ்ச்சியடைகின்றேன்.

**வண்ணை தெய்வம்**



படிப்பகம்